கொச்சி
கல்லக்குடி
திருச்சிராப்பள்ளி
காரைக்கால்
மதுரை
திருநெல்வேலி
முரசொலி
2
திராவிடப்பிரிவினை ஒலி

★ பிரிவினை வேண்டாம் எனும் பெரும் உபதேசம் நரிகளின் ஊளை! நாட்டு வெறிபிடித்த காளைகளே! கிலி பிடித்த மனிதர்களைக் கீறி எறியுங்கள்! ★★★

'திராவிட நாடு திராவிடருக்கே' என்பது சந்தர்ப்பவாதிகளின் கூச்சல் என்று பேசப்பட்டுவந்த நிலைமாறி, அது ஆறு கோடி மக்களின் உரிமைக் குரல் என்ற நிலைபெற்றிருக்கும் நேரமிது. அற்பாயுசுதான் இதற்கு என்று ஜாதகம் கணித்தோர், இது ஒரு அரசியல் சக்தியாக உருவெடுத்திருப்பதைக் கண்டு ஆச்சரியமும் ஆயாசமும் பெற்றிருக்கும் நேரம். கேலி பேசியோர் கிலிபிடித்து நிற்கவும், புறக்கணித்து விட்டால் புகைந்து போய்விடும் என்று எண்ணியோர் நம்மை ஒழிப்பதற்குப் புதுப்புது திட்டங்கள் தீட்டவுமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஆச்சரியக் குறியாக சில பல காலம் மக்கள் மன்றத்தில் நடமாடிய நாம், தென்னாட்டு எதிர்கால அரசியலின் கேள்விக் குறியாக விளங்குகிறோம்

திராவிடநாடு திராவிடருக்கே என்பது அரசியல் ஏமாளிகளின் கனவல்ல. உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டிய உயிருள்ள அரசியல் பிரச்சினை! அரசியல் அரிச்சுவடி உணர்ந்தோரும் இதை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

நம்முடைய இந்தக் கோரிக்கையை எதிர்க்கும் அரசியல் சக்திகளை இரு வகையாகப் பிரிக்கலாம். இந்தியத் துணைக் கண்டம் ஒரே நாடு; இதைத் துண்டாடுவது முறையல்லவென்று உணர்ச்சிக்கு முக்கியத்வம் கொடுத்து, உரிமைக் கிளர்ச்சியின் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து ஒப்புக் கொள்ள மறுப்போர் முதல் வகை.

உலகமே ஒன்றுபட்டு, உலகப் பார்லிமென்ட், உலகக் குடிமகன் என்றெல்லாம் பேசப்படுகிற நாளில், பிரிவினை மனப்பான்மை நல்லதா?—இந்தக் கேள்வி எழுப்புவோர் இரண்டாவது வகை. இவர்கள் பிரச்சினையை ஓரளவுக்கு விஞ்ஞான ரீதியில் அணுகுபவர்கள்.

முதல் வகையைப் பொறுத்தமட்டில், திராவிடர் இயக்கத்தைத் தவிர, இதர அரசியல் கட்சிகளெல்லாம், பிரிவினையை எதிர்ப்பவர்கள் — இந்தியா ஒரு நாடு என்று கூறுபவர்கள். முதலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை எடுத்துக் கொள்ளுவோம். இவர்கள் பிரச்சினைகளை ஆராயும் முறையே நூதனமானது. மாஸ்கோ 'தெர்மாமீட்டர்' காட்டும் அளவீடுகளைக் கொண்டுதான், இந்தியாவின் காலநிலையையே அளவிட்டறியும் அரசியல் மேதைகள் இவர்கள்! இருப்பவன்—இல்லாதவன் என்ற வர்க்கப் போராட்டம் தவிர, இதர இன, மொழி, மத அடிப்படையில் நடக்கும் போராட்டங்கள் யதார்த்த வாதத்திற்குப் பொருந்தாது என்று கூறும் இந்தத் தோழர்கள் தான், அன்று, மத அடிப்படையில் அமைந்ததும், பணச் சுமைகளான நவாபுகளும் நவாப்ஸாடாக்களும் சூத்திரதாரிகளாக நின்று இயக்கிய முஸ்லிம் லீகின் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தவர்கள். காந்தி—ஜின்னா சந்திப்பு ஏற்பட்டு, அதன் விளைவாகப் பாகிஸ்தான் ஏற்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த, ஆச்சாரியாரோடு சேர்ந்து கொண்டு, முழுப் பிரச்சார பலத்தையும் பிரயோகித்தவர்கள்!

மத அடிப்படையில் நாடு கேட்டது மார்க்ஸியத்திற்கு விரோதமாகப் படவில்லை இந்தத் தோழர்களுக்கு! ஆண்டான்—அடிமை கூடாது; வடக்கு வளரவும், தெற்கு தேயவுமான நிலையை உண்டாக்குகின்ற ஆட்சியாளரோடுள்ள தொடர்பை துண்டித்துக் கொண்டு, சமதர்மக் குடியரசு காண விழையும் நாம் பிற்போக்கு சக்தியாம், மார்க்ஸீய விரோதிகளாம்! நிச்சயம் கார்ல் மார்க்ஸ் அவருடைய கல்லறையில் கண்ணீர் விட்டுப் புழுங்கிக் கொண்டுதான் இருப்பார்!

இந்த அரசியல் காற்றாடிகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை—நாளை, மாஸ்கோ நம்மை இடதுசாரிப் பொதுவுடமை இயக்கமாக அங்கீகரித்து விட்டால் போதும். கம்யூனிஸ்ட் தோழர்களே திராவிடநாடு பிரிவினைக்கான காரணங்களை நமக்குச் சேகரித்துக் கொண்டுவந்து தருவார்கள்......!!......??

இவர்களுடைய நல்லாசியோடு அமைந்த பாகிஸ்தான், அமெரிக்க முதலாளிகளின் கூடாரத்தில் உள்ளது! கம்யூனிஸ்டுகளின் அரசியல் கணக்கே அலாதி!

அடுத்தபடியாக உள்ளவர்கள் சோஷலிஸ்டுகள். மார்க்ஸிய வாதியாக ஆரம்பித்து, 'கிரியேட்டிவ் மார்க்ஸிஸ்டா'க மாறி, ஜனநாயக சோஷலிசத்தில் குதித்து, பூதான இயக்கத்தில் ஈடுபட்டு, இன்று அரசியல் துறவு பூண்டு, ஆனால் காரசாரமான அறிக்கைகள் மூலம் அவ்வப்பொழுது தன்னை மக்களுக்கு நினைவுபடுத்திக்கொண்டு விளங்கும் இந்திய சோஷலிஸ்டு இயக்கத்தின் கர்த்தாவான ஜயப்பிரகாஷ் நாராயண்போலவே, அவருடைய இயக்கமும் மணிக்கொரு தலைவரும், தினத்துக்கொரு கட்சியும், வாரத்துக்கொரு கொள்கையுமாக மக்கள் மனதைக் குழப்பிக் கொண்டிருக்கிறது எதை ஆதரிக்கிறோம் என்பதைவிட எதை எதிர்க்கிறோம் என்பதுதான் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் திட்டவட்டமான கோள்கையையுடைய ஸ்தாபனமாக அமையும் வரையில் அவர்களுடைய கருத்துக்களுக்கு அரசியல் மதிப்பீடு ஏற்பட முடியாது!

பலம் பொருந்திய இடதுசாரிக் கட்சிகளாக விளங்க வேண்டிய கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சிகள், தென்னாட்டு மக்களுடைய பிரத்தியேகமான கோரிக்கைகளையும், அரசியல் எழுச்சிகளையும் கவனிக்க மறுப்பதால்தான், விந்தியத்திற்குத் தெற்கே அவர்கள் வேரூன்ற முடியவில்லை. தென்னாட்டவரின் துயரங்களுக்குக் காரணமான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அதைப் போக்குவதற்கான உருப்படியான அரசியல்திட்டங்களோடு வேலை செய்கின்ற காரணத்தினுல்தான் திராவிடர் இயக்கம் செல்வாக்குப் பெற்ற இடதுசாரிக் கட்சியாகத் தென்னகத்தில் பவனி வருகிறது. ஆகவேதான், சென்ற ஆண்டு, ஆரியக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒரு ஆங்கில வார ஏடு குறிப்பிட்டது:

"வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகள் இதர நாடுகளில் சிகப்பாகி (கம்யூனிஸ்ட்) விடுகிறார்கள். தென்னாட்டிலோ இவர்கள் கறுப்பாகி (திராவிட இயக்கமாக) விடுகிறார்கள்."

இதை ஒவ்வொருவரும் ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்தஉண்மையைக் கண்டு தெளிவுபெற முடியாதவர்கள், தென்னாட்டு அரசியலின் உண்மை நிலையைக் காண முடியாதவர்கள். அவர்களுக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்!

அப்படியானால் பிரிவினையை எதிர்க்கும் காங்கிரஸ்காரரின் நிலை என்ன? நாம் மக்கள் மன்றத்தில் எடுத்துவைத்து சிந்திக்கத் தூண்டும் பிரச்சினைகளை மனத்துக்குள்ளேயே வைத்துப் புழுங்குகின்றவர்கள் காங்கிரஸ்காரர்கள்! கட்சிக் கட்டுப்பாடு சிலருடைய நாக்கைக் கட்டிப் போட்டு விடுகிறது. உள்ள உணர்ச்சிகளை அப்படியே வெளியே கொட்டிவிட்டால் 'கன'மாக இருக்கமுடியாதே என்ற கவலை சிலருக்கு! எத்தனையோ விபரீதச் செயல்களுக்குக் காப்புக் கவசமாக இருக்கும் கதராடையைக் களைந்துவிட்டால்...... கற்பனை செய்து பார்க்கவே பலருக்குப் பயம்! இந்நிலையில்கூட, பதவியிலமர்ந்த காங்கிரஸ்காரர் சில சமயங்களில், டெல்லியை நோக்கி சீறத்தான் செய்கிறார்கள்:

"ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்ற எண்ணம் பலம் பெற்று வருகிறது."—ஆவடி காங்கிரசில் அம்புஜம்மாள்.

"400 கோடி கேட்டோம். 250 கோடியே கிடைத்திருக்கிறது. இருந்தாலும் மத்திய அரசாங்கத்தோடு வாதாடி இன்னும் கொஞ்சம் பெறலாமென்ற நம்பிக்கையிருக்கிறது" —சென்னை முதலமைச்சர் காமராஜர்.

"குழந்தையாக அடியெடுத்து வைக்கும் ஆந்திரத்துக்கு அதிக உதவியளிக்க மத்திய அரசாங்கம் மறுப்பது சரியல்ல"—ஆந்திர முதலமைச்சர் கோபால ரெட்டிகாரு.

"தேவையானால் டெல்லியோடு போராடியாவது நாம் அதிக உதவிபெறவேண்டும்"—மைசூர் பிரதமர் அனுமந்தய்யா.

"மலையாளப் பகுதியை மத்திய அரசாங்மும் கவனிக்கவில்லை; மாகாண அரசாங்கமும் புறக்கணிக்கிறது"—மாஜி இராஜ்ய நிர்வாக மந்திரி வி. பி. மேனன்.

"மைசூர், சென்னை, கேரளம் ஒரே அமைப்பாக இருப்பது, நிர்வாகத்திற்கு சௌகரியமாக இருக்கும்"—மேயர் சிதம்பரனர்.

இவற்றிற்கெல்லாம் பொருளென்ன? வடக்கு, தெற்கிடம் மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டுள்ளது என்பதில் காங்கிரஸ்காரருக்கு நம்மோடு அபிப்ராய பேதமில்லை. பிரச்சினை தீர, பிரிவினை ஒன்றே வழியென்கிறோம் நாம். விட்டகுறை தொட்டகுறை; காங்கிரஸ்காரர்கள் மறுக்கிறார்கள். திராவிட மொழிகள் பேசும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மக்கள் ஒரே

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 16—9—55 வெள்ளி

உதய ஒளி!

ஏழாவது ஆண்டு துவங்குகிறது. நாம் தனிக் குடித்தனம் ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் முடிந்துவிட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம்—ஆம்; விடுதலைப் போருக்கான படைக் கலன்களைப் பெருக்கிடும் புதிய பாடிவீடு!

திராவிடத்தின் உரிமைக்கு இந்தத் தேகம் தந்திடுவோம்—என தித்திக்கும் தீந்தமிழில் தீரக்குரல் கொடுக்கும் அணிவகுப்பு!

உரிமை முரசின் ஒலி கேட்டு ஒட்டாரம் பேசும் ஒண்ணன் உள்ளத்தினரை—ஒதிய மர உடலினரை—'ஒதுங்கியிரும் பிள்ளாய்' என உரைத்துவிட்டு, "நடை போடுக; படை வீரரே!" என சங்க முழங்கும் சிங்கக் கூட்டம்!

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை; மாண்டிடும் புழுவே, மகுடம் கழற்று!—என வாள் சுழற்றும் வலிமை கொண்ட சேனை!

தேரோட்டித் தெருவெல்லாம் அழகாக்கி, ஏரோட்டி எங் நாட்டுக்கும் வாழ்வளித்து, ஏற்றம் பெற்றான் எங் நாட்டான்; அங் நாட்டான் அடிமைப்பட்டான் எனில் அடங்குமோ ஆத்திரந்தான்?—எனக் கள்ளிகளைக் கெல்லி எறியத் துள்ளியெழும் மறவர் படை!

எழுச்சியுற்ற திராவிடன்தான்-ஏறுநடை சிங்கந்தான்-கொழித்து விட்ட உமிகள்தான், இனிக் குள்ளநரிக் கூட்டத்தார் எனக் கோழைகளைப் பழித்துவிட்டு கொடி தூக்கி இடியொலிக்கும் இளைஞர் வியூகம்!

நெல் விளைக்கும் நம்நாடு—
சொல் முளைக்கும் இதயக் காடு—
வேல், கோல், வெட்டு-ஆம்; ஆம்--பாடி வீடு—
பல் உதிரும் இல்லையென்றால் இந்நாட்டை-என்று புல்லர்க்கும், பொல்லாத கள்ளர்க்கும் எடுத்துரைத்து, 'போர்! போர்!! போர்!!!' எனவே தொடைதட்டி ஓடிவரும் தோழர் வரிசை!

சேரர் வாழ்ந்த சிறப்பிடம் எங்கே?
வீரர் பாண்டியர் அரசேன் கவிழ்ந்தது?
சோழர் உலவிய சோர்விலா நாட்டில் சோழைக் கொள்கை
குவிந்தது எவ்விதம்?

வெடித்திடும் வினாக்களும்—விரோதியின் கோட்டைகளை இடித்திடும் கரங்களும் கொண்டு வெற்றிக் கனி நனி சொட்டச் சொட்ட பவனி வரும் வீரர் பட்டாளம்!

'துப்பாக்கி ரவைகளா? துரைத்தனத்தின் கணைகளா? எதையும் தாங்கும் மார்பகம் உண்டு இதோ!' எனச் சீறியெழும் சின வேங்கைக் கூட்டம்!

எதிர்தரப்பிலேயிருந்து வசியப் படுத்தும் பாணம்; அது எமை வளைத்து வருத்தும் விலைமாதின் கானம்—எமக்கு வேண்டியதோ திராவிடத்தின் மானம்—என உடற் பதிந்த தழும்புகளைத் தடவிக்கொண்டு, எதிரியின்மேல் பாய்ந்திடும் தாயக விடுதலைத் தானை!

பானை வயிறு படைத்தோர் — ஆனை மேனி கொண்டோர் — பூனைக் குணங்காட்டி, பொங்கிவரும் உணர்ச்சிகளை பொட்டென்று அழித்துவிடப் பார்ப்போர் — இவர்கள் எல்லாம் இனக் கிளர்ச்சிப் படையின் முன்னே, தூள்! தூள்! என்றே தட்டடா; 'தோள்! தோள்!' எனக் கூவிவரும் புரட்சி வெள்ளம்!

அந்த வெள்ளப் பெருக்கு கண்டு, வீரர்கள் வாழ்த்துகின்றனர். விழியிலே அருவி கொண்டிருந்தோர் விருந்து வந்தது என மகிழ்கின்றனர். மருந்தின்றி செத்து, மயானத்திற்கு ஆளின்றிப் போகும் நடைபாதைப் பிணம்போல ஆகிவிடுமோ திராவிடத்தின் எதிர்காலம் என எண்ணி ஏங்கிக் கிடந்தோரின் ஏக்கமெல்லாம் பறந்துவிட்டது; புதிய ஊக்கம் பிறந்துவிட்டது. திராவிடம் சாகாது—மாறுக, புதிய சக்தி பெறும் என்ற நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகிவிட்டது. அந்த உதய ஒளியிலே ஓராயிரம்-ஈராயிரம் என்று சேல்விழி மாதர் பால்மொழி கொட்டி, **சிங்கமும் மானும் உலவுங் காடு செந்தமிழ்த் திருநாடு**—என்று சிங்காரப் பண் இசைக்கும் காட்சி தெரிகிறது—மாட்சி புரிகிறது!

டளபளவென ஒளி கொட்டும் பல்லாயிரம் ஈட்டி முனைகளோ; பள்ளிவாழ் மாணவர்தம் விழிகளோ; என வியக்கும் விதத்திலே கல்வி நிலையக் காளையர்கள் கனற் கண்காட்டி—கரம் தூக்கி—உரமூட்டி வழியனுப்பி வைக்கின்றனர், "வாழ்க விடுதலைப் படை!" என்ற தரணி புகழ் பரணியுடன்!

கிழங்களாம்; திராவிடப் பழங்கள், கிள்ளி எறியுங்கள் பேரர்களே; நம்மை அடிமை கொண்ட கள்ளிகளை!—என்று நமக்கு முன் நடை கட்டுகின்றனர், களம் நோக்கி!

இந்தியெனும் பெண்ணுள்—மந்தி-காச-முகவதியாள் — அவள் குந்தியிருக்க குடிசை கேட்டு, பின்னர் முந்திய நம் புகழை யெல்லாம் அழித்து, மொழி மூதாட்டி தமிழன்னைக்குக் குழி வெட்டிப் போட்டிடுவாள்—அதற்குள் அந்த இந்தியாளை சந்தியிலே நிறுத்திவிட சங்கத் தமிழர்களே வாரீர்! வாரீர்!—என போர்வாள் தருகின்றனர் புலவர் பெருமக்கள், புறப்பட்ட நம் படைக்கு!

அனைவரின் வாழ்த்தோடும்—அயலவர் கணை வரின் தாங்கும் மார்போடும்-பனைமரத் தோளார் இவர், பகைவரைச் சாடாது வாரார் என்ற புகழோடும்—ஏழாம் களத்தில் எடுத்தடி வைக்கிறோம்.

எத்தனையோ இடையூறுகள்-கடையூழிகள் போல! தடை நொறுக்கும் நெஞ்சால் அவைகளைத் தரைமட்டமாக்கி, நுரைகடல் சூழ் தாயகத்தை நமக்காக்கப் பயணம் நடத்துகிறோம் பல ஆண்டுகளாக!

அதிலே, கடந்த ஆறு ஆண்டுகள்—நூறு ஆண்டுகள் போல! அந்த அளவு வளர்ச்சி! அந்த அளவு தாக்குதல்!

இதோ ஏழாம் ஆண்டு! எழில் மாடம்--நமது எண்ணக்கூடம்—அன்னை திராவிடத்தின் மடியிலே வாழும் காலம்—அதை நோக்கி நடக்கும் நமது இலட்சியப் பயணத்திலே ஏழாவது தொலைகாட்டும் கல்! தொல்லை களைய-நம் எல்லை அடைய-முல்லைநிகர் பல்லையுடைய காதலியுடன்—"வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிடநாடு" என கீதம் பொழிய நேரம் வந்துவிட்டது விரைவாக; வெகு விரைவாக என அறிவிக்கும் அடையாளம்!

ஏழாம் ஆண்டில் தொடர்கிறது நமது பிரயாணம்! ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை என்ற புறநானூற்று மொழியோடு விரைந்து முன்னேறுவோம்! நாம் நிற்பது இன்பந் தேங்கும் சுனையிலல்ல; சாவு முனையில்! சதிகாரர்களின் இலக்குகள் நம்மை நோக்கி! சர்வாதிகார சல்லாப சுந்தரர்களின் சல்லடங் கட்டிய படை வரிசைகள் நமக்கு எதிரிலே! அல்ல அல்ல; நமக்குத் தெரியாத புதர்களின் மறைவுகளிலே!—அனைத்தையும் எதிர்த்து தினைத்துணையும் பயமின்றி திராவிடத் தனிநாடு பெற உறுதி எடுப்போம்! சுருதி கெட்டு இசை பாடும் வசைவாளர், பரிதி கண்ட பனி போலப் பட்டொழிந்து போவார்கள்—என்று பாட்டொலிப்போம்!

மயில் தோகை விரித்தாற்போல் மனம் படைத்த தமிழர் நாடு, ஒயில் காட்டி ஒண்ட வந்தோர்க்கு இல்லையென்று உயில் எழுதி வைப்போம்! அகில், தேக்கு, அழியாக் குன்றம்—அழகாம் முத்துக் கடல்கள் எல்லாம் நமக்கே சொந்தம் — என்று கொடி கட்டுவோம்—கொடியவரை இங்கிருந்து வடிகட்டுவோம்! ஆறிலும் சாவுதான், நூறிலும் சாவுதான்-ஆனது ஆகட்டுமே யென்று காரிருள் பகைவர்தம் கருவிகள் உடைப்போம்! தென்னாடு திராவிடரின் பொன்னாடு என திக்கெட்டும் செய்தி படைப்போம்!

ஏழாம் ஆண்டே! இலட்சிய நிலவே! வா! வா!—என வரவேற்றுக் களம் காண்போம்! ஏழையர் வாழ்வில் வளம் காண்போம்! வாழ்க திராவிடம்! வெல்க திராவிடர் பெரும்படை!

★

பூமிதானம் சமர்ப்பயாமி!

இடம்: புஷ்பராக முதலியார் வீடு.

[பூமிதானம் வாங்குவதற்காக பூமிநாதனும் சிலரும் வருகின்றனர். அவருடைய மகனும், கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவனுமான பாலனும், வேலைக்கார வீரனும் இருக்கின்றனர்.]

பூமிநாதன்: ஜெய் ஹிந்த்! நமஸ்தே!

வீரன்: ஓ, ஜெய்ஹிந்த் கட்சிக் காரவங்களா? வாங்க.

பூமி: அய்யா இருக்கிறார்களா?

வீரன்: அதை ஏன் கேக்கிறீங்க. அது பெரிய கதையாச்சே! யாரோ பிரஜா கட்சிக் காரவங்களாம்; அவங்க ஆட்களெல்லாம் ரொம்ப கஷ்டப்படுறாங்கண்ணு நிலப் பிச்சை கேக்கறாங்களாம்...

பூமி: அடடே...நிலம் அவருக்காக அல்ல தம்பி! உன்னைப்போன்ற அல்லல் படும் தோழருக்காக! நிலத்திலே நிழலாமல் உழைப்பவன் ஒருவன்; சுழலும் காற்றடிக்கும் இடத்தில் சுகம் அனுபவிப்பவன் ஒருவன் — இந்த நிலையை மாற்றியமைப்பதற்குத்தான் நிலப் பிச்சை எடுக்கிறார்கள்...

வீரன்: இந்தக் காலத்திலே யாருங்க பிச்சை போடுவா? ஒரு ஆயிர ரூபாய் கண்டெடுத்தவன் ஒரு சல்லி கொடுக்க மாட்டேங்கிறான்; அது கிடக்கு! விஷயத்தைக் கேளுங்க — அந்தக் கட்சிக்காரவுங்க எங்கே வந்து நிலத்தைப் புடுங்கிக்குவாங்களோன்னு நினைச்சு, எஜமான் நேத்தித்தான் வெளியூரு போயிருக்காரு......

பூமி: என்ன தம்பி உளறுகிறாய்? நாங்கள்தான் அந்த நிலதானம் வாங்கும் கட்சிக்காரர்கள்!

வீரன்: (பயந்து) அய்யய்யோ! உண்மையைச் சொல்லிட்டேனே.........நீங்க கதர்ச் சட்டை போட்டிருக்கீங்க; இதோட காந்திக் குல்லாய்; ஜெய்ஹிந்த் கோஷம் — ஆக காங்கிரஸ் கட்சிக்காரவங்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் தெரியாம ஏதேதோ சொல்லிட்டேனே...

பூமி: பரவாயில்லே, பரவாயில்லே! எங்களுக்கும் அவர்களுக்கும் அப்படி ஒன்றும் உருவத்தில் வித்தியாசமில்லை...... வீட்டில் வேறு யாருமே இல்லையா?

வீரன்: சின்ன எஜமான் நேத்திதான் லீவுக்காக காலேஜிலிருந்து வந்திருக்காரு; அவரைக் கூப்பிடட்டுங்களா?

[கூப்பிடுகிறான். பாலன் பி. ஏ. வருகிறான்.]

பாலன்: வணக்கம்...

பூமி: நமஸ்தே! ...நாளைக்கு இந்த ஊருக்கு விநோபா பாவே வருகிறார். உங்களைப் போல பெரிய மனிதர்களெல்லாம் மனது வைத்து ஏதோ நிலம் வழங்கினால்தான் நம்முடைய ஊர் கௌரவமடையும்...

பாலன்: மேல வீட்டுப் பண்ணையார் பதினாயிரம் ஏக்கர் வைத்திருக்கிறார்; நடுப் பண்ணைக்காரர்கள் கையில் இந்த ஊரே இருக்கிறது — அவர்களைப் பார்க்கும்போது நாங்கள் சாமான்யர்கள்தானே...... அவர்களைப் போய்க் கேளுங்களேன்!

பூமி: அவர்களைக் கேட்டுவிட்டுத்தானே இங்கே வந்திருக்கிறோம்.

பால: எவ்வளவு ஏக்கர் தந்தார்கள்? பண்ணை பூராவையுமே ஒப்புவித்து விட்டார்களா? நஞ்சையா? புஞ்சையா?

பூமி: நீங்க ஒண்ணு, தம்பி! கையை விரித்து விட்டார்கள், கனவான்கள்! நீங்கள் ஐந்து ஏக்கர் தருவதாக கையெழுத்து மட்டும் போடுங்கள். இல்லாவிட்டால் விநோபாஜி பேசும் பிரார்த்தனைக் கூட்டத்தில் நீங்கள் நிலம் தந்திருப்பதாக மக்களிடையே ஒலிபரப்புவதற்காவது அனுமதி கொடுங்கள். இல்லாவிட்டால் எங்கள் மானமே போய்விடும். ஒரே ஒரு வார்த்தைதான் தம்பி! உங்களிடம்தான் உபயோகமற்ற நிலம் இருக்குமே?

பாலன்: (யோசித்து) அது நிறைய இருக்கிறது. 5 ஏகர் தருவதாக பிரார்த்தனைக் கூட்டத்தில் சொல்லி விடுங்கள்; அப்பா திட்டுவார்கள்—எதற்கும் பார்த்துக் கொள்ளலாம்!

பூமி: இந்த நன்றியை எங்கள் கட்சி உள்ளவரையில் மறக்க மாட்டோம். வருகிறேன்.

[போகிறார்கள்.]

★

[மறுநாள் புஷ்பராக முதலியார் வருகிறார். மகனுடைய அதிகப் பிரசங்கித்தனம் கண்டு மனம் புண்ணடைகிறார். பிரார்த்தனைக் கூட்டத்தில் குழப்பம் விளைவித்து தான் நிலம் தருவதாகச் சொல்லப் படுவதை மறுப்பதற்காகச் செல்கிறார்.]

இடம்: பிரார்த்தனைக் கூட்டம்.

பூமி: மகா ஜனங்களே! நீங்கள் மகாத்மா காந்தியைப் பார்த்திருப்பீர்கள். இப்போது இங்கே உட்கார்ந்திருக்கும் விநோபாஜியையும் பாருங்கள். இருவருக்கும் அதிக வித்யாசமில்லை. காந்திக்கு தாடி இல்லை. இவருக்குத் தாடி இருக்கிறது. ஆக இருவருமே ஒன்றுதான்! எனவே புதிதாக யாரோ ஒரு தலைவர் உற்பத்தியாகியிருப்பதாக நீங்கள் தவறாகக் கருத வேண்டாம். இன்னொரு முறை உரத்த குரலில் சொல்லுங்கள்—விநோபாஜி......வாழ்க!

[கோஷம் ஒலிக்கிறது.]

அதோடு, பூமிதானம் தந்த புஷ்பராகம் பிள்ளையும் வாழ்க என்று கோஷம் போடுங்கள்!

[புஷ்பராகம் பிள்ளை வேகமாக வருகிறார், கோபாவேசத்தோடு! அவரைப் பார்த்ததும் பூமிதானம் பிள்ளை இன்னும் உரத்த குரலில் 'விநோபாஜி...வாழ்க' 'புஷ்பராகம் பிள்ளை...வாழ்க' —என்று கோஷத்தை மக்களிடமிருந்து கிளப்புகிறார்.]

புஷ்: நிறுத்தய்யா நிறுத்து! பூமிதானமாவது, புடலங்காய் தானமாவது!

பூமி: தவறு, தவறு—திருத்திக் கொள்ளுங்கள் — பூமிதானமேதான்!

புஷ்: இது என்னய்யா அயோக்யத்தனம் — (தன்னைச் சுட்டிக் காட்டி) புஷ்பராக முதலியார் நிலம் தானம் தருவதாக யார் சொன்னார்கள்?

பூமி: அவசரப்பட்டு அதைப் பற்றிச் சந்தேகப் படாதீர்கள். நான்தான் சொன்னேன், அப்படி! அன்புள்ள மகாஜனங்களே! புஷ்பராக முதலியாரின் பெருந்தன்மையை என்னவென்று சொல்வது? கொடையிலே கர்ணனையும் மிஞ்சி விட்டார்; கார்மேகமும் அவருடைய காலடியில் பணிந்து விட்டது.

புஷ்: பொய்! பொய்! புஷ்பராக முதலியார் நிலம் தரவே மாட்டார்.

பூமி: அங்கேதான் நீங்கள் தவறு செய்கிறீர்கள்! கல்லும் கரையும் எங்கள் கட்சியின் கொள்கை கேட்டு! புஷ்பராக முதலியார் இரும்பு நெஞ்சுக்காரர்தான். ஆனாலும் ஏழைகளுக்கு நிலமென்றதும் இளகி விட்டார்...

புஷ்: அக்ரமம்! அக்ரமம்! நான் அப்படிச் சொல்லவே இல்லை! இவன் பொய் சொல்லுகிறான். நான்தான் புஷ்பராக முதலியார்!

பூமி: ஆஹஹா...வர வேண்டும்...வர வேண்டும்! மகா ஜனங்களே! ஐந்து ஏக்கர் போதாதென்று நம்முடைய காரியதரிசி அப்போதே சொன்னாராம். இப்போது அதிகம் தருவதற்காக முதலியாரே நேரே வந்து விட்டார்.

[ஒரே கரகோஷம். முதலியார் 'இல்லை' 'இல்லை' என்று சப்தம் போடுகிறார். அது கூட்டத்தின் காதுக்கு எட்டவில்லை. உடனே பலர் புஷ்பராக முதலியார் கழுத்தில் மாலையைப்போடுகிறார்கள். அவரால் சாமளிக்க முடியவில்லை. சிலர் அவரை தோளிலே தூக்கிக் கொள்கின்றனர். அவர் பூமிதானம் பிள்ளையைப் பார்க்கிறார். ஆனால் பூமிதானம் பிள்ளையோ தான் வெற்றி பெற்று விட்டதாகச் சிரிக்கிறார்.]

★

தொ 8-ம் ப

பொன்னாள்!

செப்டம்பர் 17 — நம் சிந்தை கவர்ந்த நாள்-பெரியார் ராமசாமி பிறந்த நாள்!

செப்டம்பர் 17 — சிந்தாத கண்ணீரை நாம் சிந்திய நாள்—பெரியாரை விட்டுப் பிரிந்து புதுக் கழகம் கண்ட நாள்!

செப்டம்பர் 17—செங்குருதி தந்து நாடு மீட்போம் என சபதம் எடுத்திடும் நாள்-திராவிட நாட்டுப் பிரிவினை நாள்!

இருட்டறையில் இரு கண்கள் மூடிக்கொண்டு உருட்டுகின்றார் பானை சட்டி; உலகத்தார் என்று சொல்வோர்-அழுந்தட்டும் அறியாமை! அதை உணர்த்த முழங்கிற்று பெரியாரின் முரச ஒலி! அவ்வழி வந்தோர் நாம்! அய்யாவின் பிறந்த நாளில் அவர் தந்த கொள்கை வளர்த்து, கடமை-கண்யம்-கட்டுப்பாடுகள் எனும் கேடயம் ஏந்திய நம் கழகத்தின் பொலிவு காட்டி, திராவிட விடுதலைக்கான வலிவு காட்ட செப்டம்பர் 17-ல் கூடிடுவோம் வாரீர்!

மறக்க இயலாத மூன்று இலட்சியத் திருநாட்கள் பின்னிக்கிடக்கும் ஒரே நாள்-செப்டம்பர் 17! பெரியார் பிறந்ததை நினைத்து மகிழ, நாம் பிரிந்ததை நினைத்து வளர, திராவிடம் பிரிய வேண்டியதை நினைத்து நிமிர, ஒரு பொன்னான நாள்-செப்டம்பர் 17.

வாழ்க பெரியார்!

வாழ்க திராவிட விடுதலைப் படை!

‘எரிமலை’ ஏகாம்பரம்!

மாறன் எம். ஏ.

“அதோ, தெரிகிறதே புகைபோக்கி-அதிலிருந்து குமுறிக் கிளம்பி வான மண்டலத்தைக் கருப்பாக்குகிறதே — அதைப் புகைச் சுருள் என்று நினைக்கிறீர்கள்? அல்ல; அல்ல! நம்போன்ற ஏழைப் பாட்டாளி மக்கள் விடும் பெருமூச்சுத் திரள்தான் அது! இவையெல்லாம் நம்மை அடிமையாக்கியிருக்கும் முதலைக்குத் தெரியாது. அவருக்கு வேண்டுவதோ பொருள்! எம்பெருமான் பணநாதன் அருள்!”

—‘எரிமலை’ ஏகாம்பரம் தன் பேச்சுக்கு ஒரு பெரிய ‘கமா’ போட்டுவிட்டு, சோடா பாட்டிலின் பக்கம் பார்வையைத் திருப்பினன். கடல் பொங்கி வருவது போன்ற கைதட்டல் —அவன் எதிர்பார்த்ததுதான்!— அந்த இடைநேரத்தை நிரப்பியது!

“சம்பள உயர்வு வேண்டும். அதற்காக நாம் நடத்தும் இந்த வேலை நிறுத்தம் வெற்றிபெறு விட்டால், இந்த ‘பூர்ஷுவா மில்’லை தவிடு பொடி செய்ய வேண்டும். ‘பூர்ஷுவா மில்’ நிர்வாகிகளே! என்ன சொல்கிறீர்கள்? எங்கள் வாழ்வா? அல்லது உங்கள் அழிவா?— எது வேண்டும் என்பதை இன்னும் இருபத்தி நான்கு மணி நேரத்துக்குள் தீர்மானித்து விடுங்கள்!”

—மீண்டும் கை தட்டல்! இடைவிடாத கைதட்டல்!

இந்த நேரம் ஏகாம்பரம் தன் பக்கத்து நாற்காலி பக்கம் கண்களைத் திருப்பினன். ஆமாம்; அங்கே திருப்தியற்ற நிலையிலே தலைவர் தணலப்பா உட்கார்ந்திருப்பது அவன் உள்ளத்தை உறுத்தியது.

“தோழர்களே! என் முடிவை நீங்கள் ஆமோதித்து விட்டீர்கள். பொங்கி எழுந்து விட்டது பாட்டாளி வர்க்கம். திண்டிலே சாய்ந்துகொண்டு பணத்தைச்சுண்டி விளையாடும் முதலாளிக் கூட்டமே! உங்கள் முடிவு காலம் நெருங்கி விட்டது.

“வேலைநிறுத்தம் செய்தோம். எங்கும் இல்லாத வகையிலே பத்து நாட்கள் தொடர்ந்து நடத்தினேம். அதனல் நம் வேதனை குறையுமென்றுதான் எதிர்பார்த்தோம். அந்த வேலையற்றவர்களோ நம் வேலை நிறுத்தத்தைக் கவனித்ததாகவே தெரியவில்லை. கவலையற்றவர்கள்போல் நடித்து நம் கவலையை அதிகமாக்கி விட்டார்கள். கந்தகக் கிடங்குகளே—என் கண்போன்ற தோழர்களே! இருபத்து நான்கு மணிநேரத்துக்குள் நம் சவாலை அவர்கள் ஏற்றுக்கொண்டு, சஞ்சலம் போக்க முன்வராவிடில் உங்களுக்கெல்லாம் தீ வைக்கப் போகிறேன். அந்தத் தீயிலே இந்தப் ‘பூர்ஷுவாமில்’லை நடத்தும் தீயவர்கள் தீய்ந்து போக வேண்டும். தீ பரவட்டும்! அப்போதுதான் பூனை தூங்கும் உங்கள் வீட்டு அடுப்பிலே தீ வந்து தங்கும்!

“புலிக்குட்டிகளே! இரை தேடித் திரிந்த இளஞ் சிங்கங்களே! நாளை இந்நேரம் தாவிப் பாய்ந்திடத் தயாராயிருங்கள்.”

-தலைவர் தணலப்பா தொண்டையைக் கனைத்தார். அதற்கு மேல்பேசினல் ஆபத்து என்று உணர்ந்த ‘எரிமலை’ அத்துடன் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்து விட்டான்.

“ஆவேசமான பேச்சு! அருமையான யோசனை!”-இப்படிச் சொல்லிக் கொண்டே கைலாகு கொடுத்தார்கள், சிலர்!

“பாட்டாளி வர்க்கத்தின் படைத் தலைவா! நாளை நமக்கு சரியான பதில் கிடைக்காவிட்டால் ‘பூர்ஷுவா மில்’லைப் பஸ்பமாக்கி விடுவோம்!” — பாராட்டும், பக்கபலமும் கலந்திருந்தது இந்த வாசகத்தில்!

ரோம் நகரை எரித்த நீரோவைப்போல நெஞ்சு நிமிர்ந்து நின்றான், ஏகாம்பரம்! அகிலமெலாம் கட்டியாள நினைத்த அலெக்சாண்டருக்கு இருந்த இறுமாப்பு அந்தக்கணம் அவன் இருதயத்தில் குடி கொண்டிருந்தது.

அப்போதுதான் பாலன் வந்தான். பாழாய்ப்போன அந்தச் செய்தியையும் சொன்னன். நுனிக்கரும்பைக் கடித்து விட்டது போன்ற உணர்ச்சி அவனை ஊடுறுவியது.

“தலைவர் தணலப்பா உண்மையிலேயே தணலாக இருக்கிறாரப்பா! உன் பேச்சு அவருக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லையாம். உன்னிடம் வேலை நிறுத்தத் தலைமைப் பதவி கொடுத்ததை, சின்னக் குழந்தையிடம் சீன வெடிகளைக் கொடுத்ததைப் போல நினைக்கிறார்...” — பாலன் முடிக்கவில்லை. ஏகாம்பரம் பேச ஆரம்பித்தான்.

“எரிமலையைச் சிறுமழையால் அணைக்கப் பார்க்கிறார், தலைவர். பாலா! எப்படியும் நான் என் திட்டத்தை நிறைவேற்றத்தான் போகிறேன். இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் ‘பூர்ஷுவா மில்’ முதலாளிகள் நம் நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு வராவிட்டால் எரிக்கத்தான் போகிறேன்! பஞ்சு இருக்கிறது; பற்றவைக்க தொழிலாளிகள் ஆயிரமாயிரம் தீக்குச்சிகளாக இருக்கிறார்கள். பின்னர் நாம் ஏன் தயங்க வேண்டும்?”

“தலைவர் தடுக்கிறாரே!”

“அவர் கிடக்கிறார்! பல்போன சிங்கம் வேட்டையையா விரும்பும்? தலைவர் தடுத்தாலும் தணல்படு காண்டத்தை நடத்தத்தான் போகிறேன்!”

“ஏகாம்பரம்?...”

“ஏன், ஆச்சரியப் படுகிறாய்? உன் போன்ற தோழர்களின் தயவும், துணிவும் இருக்கும் வரை நான் எந்தத் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும்? வா! விளக்கம் தருகிறேன்.” — ஏகாம்பரம் அவன் தோள்மீது கையைப் போட்டு அழைத்துச் சென்றான். ஏகாம்பரம் தோள்மீது கை போடுகிறான் என்றால், எதிரி சாய்ந்தான் என்று அர்த்தம். பாலன் ஊமையாகிவிட்டான்: அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை!

★

சந்திரன் இல்லாத வானம்— பூனைகளின் எலிவேட்டைக்குகந்த இரவு அது!

தணலப்பா அப்போதுதான் படுத்தார். பக்குவமில்லாதவர்கள் கையிலே பதவியைத் தந்து விட்டோமே; திருடன் கையிலே தங்கச் சிலைபோன்ற சங்கத்தையல்லவா ஒப்புவித்து விட்டோம்; என்ன நேருமோ? ஏது நடக்குமோ?—என்ற கவலைக் கழுகுகள்வட்டமிட்ட போதிலும்கூட அவர் கண்களைத் தூக்கம் தழுவிவிட்டது.

அவர் கண்ணைத் திறக்காத நிலைமையை உண்டாக்க அப்போதுதான் கையிலே கத்தியுடன் குதித்தான் ஏகாம்பரம்-- பக்கத்திலே பாலனுடன்!

“பயப்படாதே! முதலில் அப்படித்தான இருக்கும்; மார்பு படபட வென்கும்; மயக்கம் வரும்; மாட்டிக் கொள்வோமோ-என்ற பீதி, போதையென தலையைச் சுற்றும்; எல்லாம் போகப் போகச் சரியாகி விடும்...இப்போது நான் செய்வதை யெல்லாம் கவனித்துக் கொண்டிரு; கூச்சல் மட்டும் போடாதே — நம் குடும்பமே நாசமாகிவிடும்!”

—உதடுகள் சிறிதே அசைய, கண்ணும் கையும் துணைக்கு வர, பாலனுக்கு விஷய விளக்கம் தந்தான் ஏகாம்பரம்!

“ஆ! அய்யோ!”—என்ற சப்தம் கூரையைக் கிழித்தது!

மறுநொடியில் ஏகாம்பரமும், பாலனும் வீட்டிற்கு வெளியே வந்து சேர்ந்தனர்!

“பாலா! தணலிலே தண்ணீர் கொட்டி விட்டோம். இந்தக் கூச்சல்கூட கிளம்பாமல் செய்திருப்பேன். ஊம்... அதனல் என்ன? இப்போதும் காரியம் கெட்டுவிடவில்லை!”

—பாலனுடைய காது ஜவ்வுகள் இந்த உபதேசத்தைக் கேட்க முடிகிற அளவுக்கு வேலை செய்யவில்லை. மார்புக் கூட்டிலிருந்து மட்டும் பெரிய கோவில் மணி ஒலிப்புகிற சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

★★★ தோழனே, கேள்! பானிபட் போர்க் களத்திலே பாபரை எதிர்த்து, போருக்குத் தலைமை வகித்த இப்ராகிம் லோடி அம்பு தைத்து யானையிலிருந்து கீழே விழுந்ததும், தலைவனை இழந்த சேனை சிதறி ஓடிப்போனதை சரித்திரத்திலே படித்துவிட்டு இப்படிப் பேசுகிறாய்! இது இருபதாம் நூற்றாண்டு! இந்தக் காலத்துப் போர்முறைக்கு உயிருள்ள தலைவன் தேவையில்லை, நண்பனே!—அவன் பிரேதமே போதும், பிரளயம் உண்டுபண்ண! புரிந்ததா தோழா?

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்...

மலையாள பகவதி, மாயாண்டிக் கிழவன் புதையல் தோண்டுவதற்கு இன்றோ, நாளையோ முயறசிக்கப் போகிறார் என்பதை ஜாடையாகச் சொல்லுகிறான். அம்பலம் ஆனந்த மடைகிறார். அதோடு, துரையிடமிருந்தும் ஏதாவது ரகசியம் கிடைக்குமா என்று பார்க்க, பகவதியை துரையின் அறைக்குத் தந்திரமாக அனுப்புகிறார். துரையின் அறைச்கு பசவதி வந்து விட்டதால் மேனகாவுக்குக் கஷ்டமாகி விட்டது. அப்படியும், அவள் கண்கள் துரையை வட்டமிட்டபடியிருந்தன. இதை பகவதியும் ஒரு மூலையில் இருந்தபடி கவனித்தான்.

40. மாதுளம் பழம்!

அவனோடு அவள் தாராளமாகப் பேச முடியாதபடி, தான் ஒரு தடையாக வந்து சேர்ந்து விட்டோம் என்று மலையாள' பகவதி கருதினான் போலும்! அதனால் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக கண்களை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான்.

சிறிது நேரம் சென்றதும், துரையும் அறையில் உலவிக் கொண்டிருந்தவன் ஜன்னல் பக்கம் போய் நின்று, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். தூங்குவதுபோல் நடித்துக் கொண்டிருந்த குடுகுடுப்பைக்காரன் மெதுவாக இமைகளைத் திறந்து பார்த்து அறையில் நடப்பவைகளை ஆவலாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மேனகா ஜன்னல் பக்கம் வந்து விட்டாள். எதிர்பாராத விதமாக துரையும் அவள் கண்களில் அகப்பட்டுக் கொண்டு அசைவற்று நின்றுவிட்டான். மேனகாவின் கையிலே ஒரு மாதுளம் பழம் இருந்தது. அவள் அதை துரையிடம் நீட்டி, 'இந்த மாதுளம் பழத்தை சாப்பிடுங்கள்' என்றாள்.

"பரவாயில்லை— வேண்டாம்!" என்று துரை அலட்சியமாக விடையளித்தான்.

"ஏன், மாதுளை பிடிக்காதா?"- மேனகாவின் விரகதாபம் நிறைந்த இந்தக் கேள்விக்குத் துரையினால் பதில் கூறமுடியவில்லை. ரத்தினத்தின் ஒளிகாட்டும் அந்த எழில் மாதுளையைக் கையிலேந்தி நிற்கும் அவளது கன்னங்களே இரண்டு மாதுளைகள்! என்ன செய்வது— அவனுக்குத்தான் அந்த மாதுளை தேவையில்லையே! அதனால் அவளையும் அந்த அழகுமிழுங் கனியையும் ஒப்பிட்டுப் பார்க்கும் கவிஞனாக அவன் மாறவில்லை.

மேனகா, அவனது இளமை துள்ளும் முகத்தைப் பார்த்தவாறு பளிங்குச் சிலை போல நின்றாள். பிறகு, கையிலேயுள்ள கனியை உடைத்தாள். கண்ணகி காற்சிலம்பை உடைத்தபோது மாணிக்கப் பரல்கள் சிதறியதுபோல, மாதுளையிலேயிருந்து பவள விதைகள் சிதறின. அவைகளைத் தன் கரத்திலேந்தி அவன் முகத்துக்கு நேரே காட்டினாள்.

அவனோ, வேண்டாமென்பதற்கு அடையாளமாக தலையை அசைத்து நின்றான்.

"தயவுசெய்து சாப்பிடுங்கள்—எனக்காக!" என்று கெஞ்சு மொழி உதிர்த்தாள், அவனிடமிருந்து கொஞ்சு மொழியை எதிர்பார்த்து!

"என்னம்மா இது; பெரிய வம்பாயிருக்கிறது! இந்த அறையிலே தனியே கிடந்து வாடுவதைவிட பெரிய அவஸ்தையாக இருக்கிறதே உன்னால்! ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று சிறிது ஆத்திரமாகப் பேசினான் துரை.

"உஸ்! மெள்ளப் பேசுங்கள்- குடுகுடுப்பைக்காரன் இருக்கிறான்" என்று தன் வாயைப்பொத்திக் காட்டினாள் அவள்.

"அவன் தூங்குகிறான். அதிருக்கட்டும்—நீயோ, திருமணமானவள். இப்படித் தவறாக நடந்து கொள்ளலாமா?"—துரை, உரிமையோடு கேட்டான் அவளிடம்.

அவளும் இதுதான்சமயமென்று தனது கண்ணீர்ப் புராணத்தை ஆரம்பித்தாள்:

"திருமணமானவள்தான்! அதை மறுக்கவில்லை. ஆனால், பெண்களின் வாழ்வு, திருமணம் என்ற ஒரு சடங்கோடு முடிந்து விடுகிறதா?"

"அதெப்படி முடியும். திருமணம், பெண்கள் வாழ்வில் ஒரு பருவத் திருப்பம்! அதற்குப் பிறகு தானே நல்ல குடும்பமெனும் பல்கலைக் கழகத்திற்கு அவர்கள் ஆசிரியர்களாகிறார்கள்!"

"அழகாகத்தான் பேசுகிறீர்கள்! ஆனால், பெண்கள் சமுதாயத்தைப் பற்றி பிரசங்கம் புரிகிறவர்களுக்கு தனிப்பட்ட ஒரு பெண்ணின் சங்கடங்கள் புரியாது போலும்! இல்லையா?"

"புரியாமல் என்ன? புலியின் பசிக்கு ஆடுகளைத்தான் கொடுக்க முடியும், சர்க்கஸ்காரனால்! அதைவிட்டு தானே இரையாக முடியுமா?"

"நீங்கள் குறிப்பிடும் ஆடுகள்...?"

"அறிவுரைகள்!"

"ஏட்டுச் சர்க்கரை இனிக்காதே!"

"நான் தரும் சர்க்கரை நாவுக்கல்ல தாயே—இருதயத்துக்கு!"

"தாயா?"

"ஆமாம்—தாய்க் குலம்தானே பெண்கள் குலம்!"

"ம்—புலியென்கிறீர்கள் என்னை! அய்யா சர்க்கஸ்காரரே! நான் புலியல்ல — இன்ப வானில் பறக்க சிறகடிக்கும் புறா! தாயல்ல வாலிபரே நான்! தாலியென்னும் லைசென்ஸ் கட்டப்பட்ட நாய்! திருமணமாகி விட்டது—தீய வழி கூடாது என ஆடுகளை அவிழ்த்து விடுவீர்கள்..."

"என்ன, ஆடுகளையா?"

"ஆமாம்; அறிவுரைகளை! இந்த அறிவுரைகளையெல்லாம் படிக்காதவள் அல்ல நான். படித்திருக்கிறேன்; பள்ளியிலே மட்டுமல்ல! பருமனான புத்தகங்களிலே கூட! அந்தப் படிப்புக்கு பருவத்தின் துடிப்பை அடக்கும் சக்தி இல்லை என்பதை ஆதாரபூர்வமாக நூல் வடிவிலே தரக்கூடிய அனுபவங்களையும் படித்துக்கொண்டு வருகிறேன் இப்போது! இளைஞரே! என்னைப் பாருங்கள்! இந்த மாதுளை முத்துபோல சத்து நிறைந்த யுவதி! சந்தன வில்லை சகதியிலே கிடக்கலாமா? கிடந்தால் அதைப் பார்த்துக்கொண்டு தான் போவீர்களா?"

"பிறகென்ன? சகதிலே யிருந்து அதை எடுத்துப் பூசிக்கொள்ள முடியுமா?"

"மன்னிக்கவும்—சந்தன வில்லை சரியான உதாரணமில்லை! நான் குப்பையிலே வீசி எறியப்பட்ட கோமேதகம்! இதையாவது ஒத்துக் கொள்கிறீர்களா?"

கொட்டும் மழையில் கூடினோம்!

1949-செப்டம்பர்—17; தந்தையின் தகாப்போக்கு காரணமாக அம்பு தைத்த மானை ஒத்த திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் சிங்காரச் சென்னையிலே திரண்டனர். திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனர்.

கண்ணீரால் தலைவரின் உள்ளத்தைக் குளிப்பாட்டி விட்டு புதிய கழகத்தைத் துவக்கி வைத்தார் காஞ்சியின் கதிரவன்-களம்பல கண்ட இலட்சியக் குன்றம்—அண்ணா அவர்கள்!

முதல் பொதுச் செயலாளர் ஆனார்; இயக்கத்தின் முதலாம் கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு என்னும் கவசத்தையும் ஈந்தார்.

அன்று நாம் அழுதோம்; நாடு அழுதது; வானமும் மாரிபெய்து கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கியது!

அடுத்த ஒலியில்

குறளோவியம்

மகாபாரதம்

சக்கரவர்த்தியின் திருமகன்

"ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இந்த கோமேதகத்தை எடுக்க குப்பையைக் கிளற விரும்பவில்லை!"

"காரணம்?"

"கோமேதகம் எனக்குச் சொந்தமில்லை!"

"ஓகோ! அப்படியானால் சுய உடைமையில்தான் அக்கரை காட்டுவீர்களா?"

"இந்த மாதிரி விஷயங்களில் பொது உடைமை கூடாதம்மா!"

"பதில் கூறி நேரத்தைப் பாழாக்காதீர்கள்! இந்தப் பாவிக்கு ஒரு முடிவு சொல்லுங்கள்!"

"என்ன முடிவை என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாய்?"

"ஒரு பெண் ஒரு ஆணிடம் எதை எதிர்பார்ப்பாள்?"

"மேனகா!......" —துரையினால் பேச இயலவில்லை. அவளது பரிதாபமான நிலையை அவனால் உணர முடிந்தது. ஒரு படித்த பெண், பட்டிக்காட்டு குட்டி ராஜாவிடம் அகப்பட்டுக் கொண்டு அலைமோதுகிறாள் என்பதைக் கண்டு உள்ளபடியே அவன் வருந்தினான். அவளது உள்ளத்திலே உலகத்தின் ஒளிமயமான பகுதிகளில் உலவ வேண்டுமென்ற ஆசைக் கனல் கொழுந்து விடுவதை, அவளது கண்களின் மூலம் அறிய முடிந்தது. வெறும் உணர்ச்சிக் கூடாக இல்லாமல், உயர் எண்ணங்கள் குலுங்கும் மலர்க் காடாக வாழ்வு அமைய வேண்டுமென்றுதான் அவள் துடித்துக் கிடந்தாள். அந்தத் துடிப்பை கண்களிலே வழியும் நீர்த்துளிகள் துல்லியமாக அவனுக்குக் காட்டின. மேனகா, மீண்டும் பேசினாள்:

"என்னைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களிடம் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிடுகிறேன். நீங்களே யோசித்துப் பாருங்கள், நான் அவருக்கு பொருத்தமான மனைவிதானா? இல்லை, இல்லை—அவர் எனக்குப் பொருத்தமான புருஷர்தானா?"

"இந்தக் கேள்வி, ஓமகுண்டத்திற்கு முன்பு உட்கார்ந்தாயே; அதற்கு முன்பே கிளம்பியிருக்க வேண்டும்—உன் நெஞ்சில்!"

மேனகா பேசாமல் நின்றாள். தன் தந்தைக்காக தியாகம் செய்ய வேண்டிய கட்டம், அதற்குஅவள் பலியானாள்-இப்படி ஒரு வசிகரத் தென்றலை காணிக்கையாகக் கேட்காமலே, வெள்ளியம்பலம் கருணை காட்டியிருக்க முடியும்; ஆனால் அப்படிக் காட்டியிருந்தால் அவர் வெள்ளியம்பலமாக இருந்திருக்க முடியாது!

கன்னங்களில் உருண்டோடும் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொண்டே, அவள், அவனைப் பார்த்து, "நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வதாயிருந்தால், நாம் இருவருமே இங்கிருந்து தப்பிவிட என்னால் வழி செய்ய முடியும்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக் கொண்டே அவன் முகத்தைப் பார்த்தாள்.

துரையின் முகத்திலே எந்த விதமான திடீர் மாறுதலும் ஏற்படவில்லை. மூலையில் தூங்குவதுபோல் கிடந்த மலையாள பகவதியின் முகத்திலே மட்டும் திடீர் மாறுதல் தோன்றியது.

"ஆகா! அருமையான நிபந்தனை அம்மா போடுறீங்க—அதான்சரி! அதான் சரி!" என்று கத்திக் கொண்டே அவன் ஜன்னலண்டை ஓடிவந்து, துரைக்கு அருகே நின்றான்.

அவன் எழுந்ததைக் கண்ட மேனகா, அதைவிட்டு நகர ஆரம்பித்தாள். உடனே, மலையாள பகவதி அவளைக் கூப்பிட்டு, "நில்லுங்கம்மா — சின்னம்மா வாயாலே, நமக்கு விடுதலேன்னு சொல்லியாச்சு! நல்லகாலம் பொறக்குது-நல்லகாலம் பொறக்குது! அம்மா கேக்கிறத்துக்கு—அப்பன் தலையை ஆட்ட வேண்டியதுதான் பாக்கி!" என்றுஅவன் பேசிக் கொண்டேயிருந்தான்.

"ஏய் பகவதி! நில்லப்பா!" என்று அதட்டினான் துரை.

"அதெல்லாம் அப்பன் பூச்சாண்டி காட்டக் கூடாது! மலையாள பகவதி—சக்கம்மா—காளியாயி-சொல்றது நமக்கு ஒரு பெண்ணால விடுதலை இருக்குன்னு! அம்மா பகவதி சொன்னா பொய்க்காது! அப்பனே, நீ இந்த சின்னம்மா கேக்கிறத்தை தர்றேன்னு சொல்லு! சீக்கிரம் சொல்லு!"

—குடுகுடுப்பைக்காரன், தனது விடுதலைக்காக வேண்டி, தன் பக்கம் பேசுவது மேனகாவுக்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

"அய்யா பகவதி! நீ சொல்லய்யா! இவரோட மனசை இளகும்படிச் செய்யய்யா!" என்று அவனைக் கேட்டுக் கொண்டாள் மேனகா!

மலையாள பகவதியும், மேனகாவுக்காக துரையிடம் பலமான சிபாரிசுகளை வாரி இறைத்தான். மேனகாவின் ரூபலாவண்யங்களை அங்கம் அங்கமாக வர்ணிக்கத் தொடங்கி விட்டான். பெண் பாவம், பொல்லாது!-என்றும் பயமுறுத்தினான்.

"ஆமாம்—அதனால்தான் என்னை நம்பிய பெண்ணுக்கு துரோகம் செய்ய பயப்படுகிறேன்" என்று பதில் தந்தான் துரை.

மலையாளபகவதி புன்னகை காட்டி நின்றான். மேனகாவும், முடிவுக்காக நின்றாள்.

கடைசியாக குடுகுடுப்பைக் காரன் மேனகாவிடம், "சின்னம்மாவுக்கு, இந்த அப்பன் மாப்பிள்ளையாக ஒத்துக்கலேன்னா—சாயபு பார்த்து சரியான ஜோடி சேர்க்கிறான்-சரியான ஜோடி சேர்க்கிறான்!" என்று உறுதியாகச் சொன்னான்.

அது கேட்டதும் அவளும், "சாயபு! எப்படியோ எனக்கு இங்கிருந்து விடுதலையானால் போதும்! இந்த முரடன் கையிலேயிருந்து தப்பி, யாருங் காணாத சீமைக்குப் போய்விடவேண்டும்" என்று தயவாகக் கேட்டுக்கொண்டாள்.

"நல்லகாலம் பொறக்குது! நமக்கு விடுதலை பொறக்குது!" என்று கத்தினான் பகவதி.

அந்த சமயம் வெள்ளியம்பலம் வரும் ஓசை கேட்டு, மேனகா ஓடிவிட்டாள். வெள்ளியம்பலம் அறைக் கதவைத் திறந்து மலையான பகவதியை வெளியே அழைத்துக்கொண்டு போனார்.

அம்பலத்திடம், பகவதி, இன்னும் வசியம் முடியவில்லையென்றும், அடைபட்டிருக்கும் ஆளிடமிருந்து ரகசியம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், அன்றிரவு கிழவன் ஒருவன் புதையல் தோண்டப் போவது மட்டும் உண்மையென்று சக்கம்மா காளி சொன்னதாகச் சொல்லுகிறான்.

அப்படியானால், அன்றிரவு சிவன் கோயில் பக்கம் ஆட்கள் சகிதம் போக வேண்டுமென்று அம்பலம் முடிவு செய்துகொண்டு குடுகுடுப்பைக்காரனை மீண்டும் அறைக்குள் போட்டுப் பூட்டிவிட்டுப் புறப்பட்டார்.

[வளரும்]

குதிரையின் குளம்படிகளைத் தாங்கினோம் !

கண்ணீர் வெடி; கடுமையான தடியடி; 144-தடை; பறிமுதல்; ஜாமீன் தொகை—இப்படித்தான் முன்பு நம்மை நோக்கி நச்சுக் கணைகள் தாவி வந்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் தீரர்களின் முகாம் என்று தெரிந்து கொண்ட பிறகு ஆட்சியாளரின் போக்கிலும் ஒரு புது முறுக்கு ஏறியது.

இரண்டு முறை நம்மால் துரத்தியடிக்கப்பட்ட ஆச்சாரியார் கவர்னர் ஜெனரலாகக் கங்காணி வேஷம் பூண்டு சென்னைக்குக் காலடி எடுத்து வைத்தபோது, நமது அதிருப்தியின் சின்னமாம் கருப்புக் கொடிகள் கதிரவனையே மறைத்தன. கருப்புக்கொடி ஏந்தி வானமெல்லாம் புருக்கள் வட்டமிட்டன. கருப்பு ரவிக்கை போட்டிருந்த மங்கையரைக்கூட அனுமதிக்காத ராஜாஜி கூட்டத்தில் எங்கிருந்தோ கொடிகள் வந்து மாற்றாரின் குலை நடுங்கச் செய்தன.

—அப்போதுதான் நம்மீது குதிரைப் பட்டாளம் ஏவப்பட்டது. அடிமை நாய்களைப் போல ஆயிரமாயிரம் திராவிடத்துச் செல்வங்கள் மீது குதிரையின் குளம்படிகள் முத்திரைகளைப் பதித்தன. வேடிக்கை பார்க்க வந்த பொது மக்கள்கூட ஈ, எறும்புகளைப் போல நசுக்கியெறியப்பட்டார்கள்!

அன்று முதல் நாம் பெற்றுவரும் தியாகத் தழும்புகளால்தான் இன்று தி. மு. க. எதிரியும் மதித்திடும் நிலையில் வளர்ந்திருக்கிறது!

நமக்கோர் நாடு...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பில் வரவேண்டும் என்ற சென்னை மேயரின் அறிவுரையும், அதற்கு மறைமுகமாக மைசூர்ப் பிரதமர் அனுமந்தையா கொடுத்திருக்கும் ஆமோதிப்பும், காங்கிரஸ்காரர்களும் நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கோர் எடுத்துக் காட்டு. காலப் போக்கு அவர்களை நம்மோடு இணைத்துவிடும்.

இனி, ஒரே உலகம் காட்டிப் பிரிவினையை எதிர்ப்பவர்களைக் கவனிப்போம். ஒரே உலகம் காண விழைகின்ற இவர்களுக்கு, அதுபற்றி உருவான விளக்கம் கொடுத்த வெண்டல் வில்கி, வெல்ஸ், ரஸ்ஸல் போன்றோருடைய கருத்துக்களைக் கவனமூட்டுவது அவசியமாகிறது. "மனித சமுதாயத்தில் பரஸ்பரம் நம்பிக்கை யூட்டுவதுதான் ஒரே உலகம் காணும் ஒரே வழி. ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைச் சுரண்டுகிறது என்ற எண்ணமும் பயமும் இருக்கும் வரையில், இந்த லட்சியம் வெறும் கனவாகவே இருக்கும். ஆகவே மக்கள் தங்கள் தங்கள் கலாச்சார உரிமையோடு வாழ வகை செய்தல் அவசியம். அப்பொழுதுதான் பரஸ்பர நம்பிக்கையும் நட்பும் வளரும்." ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கையை ஆரம்பத்திலேயே காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தால், நாட்டுப் பிரிவினைக்குப் பின் ஏற்பட்ட பயங்கரமான நிகழ்ச்சிகள் ஏற்பட சந்தர்ப்பமே இருந்திருக்காது. பாகிஸ்தான் — இந்தியா நல்லுறவும் வளர்ந்திருக்கும். கடந்த கால சரித்திரத்திலிருந்து பாடம் கற்று, வருங்காலத்தை யூகித்துணர்ந்து, நிகழ்காலத்தில் திட்டம் தீட்டுகிறவன்தான் அரசியல் மேதை. ஒவ்வொரு பிரதேசத்தின் சக்தியிலும் நம்பிக்கை வைத்து, சுய நிர்ணய உரிமை அளித்தால்தான், நிலையான நல்ல நாடுகள் அமையும். இந்த நாடுகள் மதிப்புக் குன்றாமல் சம அந்தஸ்தோடு ஒன்றுபட்டு உழைக்க முன்வரும்போது ஒரே உலகம் அமையும். இந்தக் காரணம் பற்றியே சோவியத் குடியரசும் தன்னாட்சியிலுள்ள பிரதேசங்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்கியிருக்கிறது. பிரத்யட்ச உண்மைகளை மறந்துவிட்டு, கற்பனையிலே அரசியல் தெளிவு ஏற்பட முடியாது.

வடநாடு தென்னாட்டைப் புறக்கணிக்கிறது என்றாலும், பிரிவினைக் கோரிக்கையை ஆந்திரர் ஆதரிக்காதபோது, கன்னடியர் கவனிக்க மறுத்தும், கேரளர் கேளாக் காதினராக இருக்கும் நிலையில், திராவிடநாடு அமைவது சாத்தியமா என்ற சந்தேகம் சிலருக்கு. பாகிஸ்தான் வளர்ந்த வரலாற்றை இவர்கள் நினைவூட்டிக் கொள்ளுதல் நல்லது.

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த ஜின்னாவும், ஐக்யமாகாணத்தைச் [இப்பொழுது உத்தரப் பிரதேசம்] சேர்ந்த லியாகத் அலிகானும், இவர்களுக்குத் தொடர்பேயில்லாத, எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், சிந்து, வங்கம், அஸ்ஸாம், காஷ்மீர், ஆகியவற்றைப் 'பாகிஸ்தான்' என்ற அமைப்பாகக் கேட்டார்கள், முஸ்லிம்கள் அங்கே பெருவாரியாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால!

மக்களின் ஆதரவோடு எல்லைப்புற மாகாணத்தின் பிரதமராக இருந்த கான்சாகிப் பிரிவினையை எதிர்த்தார். அவர் அப்போது காங்கிரஸ்காரர்!

பஞ்சாபின் பிரதமர் சிக்கந்தர் ஹயாத்கான் எதிர்த்தார்!

சிந்துப் பிரதமர், தேசிய முஸ்லிம், அல்லாபக்ஷ் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்தார்!

காஷ்மீர சிங்கம், நேருவின் மாஜி நண்பர், காஷ்மீர் மக்கள் சபையின் மாஜித்தலைவர் ஷேக் அப்துல்லா பாகிஸ்தானை எதிர்த்தார். ஜின்னாவுக்குப் பேட்டிகூட அளிக்க மறுத்தார்!!

வங்கப்புலி, அப்பொழுது வங்கத்தின் பிரதமர், பஸ்லுல் ஹக் எதிர்த்தார்!

அஸ்ஸாமில், அதன் பிரதமர் ஸாதுல்லா எதிர்த்தார். அவரும் ஒரு காங்கிரஸ் முஸ்லிம்!

ஆனால் நடந்ததென்ன? ஜின்னா மனம் சலித்தாரா? மார்க்கமில்லையே என்று மனமுடைந்து அரசியல் துறவு பூண்டாரா? எதிர்ப்புக்கிடையே மக்கள் சக்தியை உருவாக்கினார். பாகிஸ்தான் அமைந்தது!

அன்று பிரிவினையை எதிர்த்த கான்சாகிப் பாகிஸ்தான் மத்ய அரசாங்கத்தில் இன்று ஒரு மந்திரி. ஒரே அமைப்பாக மேற்கு பாகிஸ்தான் அமைக்கப்படும்போது, அதன் பிரதமராக பாகிஸ்தான் அரசாங்கம் அவரை நியமித்துள்ளது! அன்று எதிர்த்த பஸ்லுல்ஹக், லீகோடு சேர்ந்து இன்றுகூட்டு மந்திரி சபையில் பதவி வகிக்கிறார். பிரச்சினையை முதலில் எதிர்ப்பதும், பிறருடைய உழைப்பால் அது உருவானபின், வெற்றி பெற்றவுடன் ஆதரிப்பதும் அரசியல் வாடிக்கை! பாகிஸ்தான் காட்டும் படிப்பினை இது.

ஆகவே, காமராஜரும், கோபாலரெட்டியும், கோவிந்தமேனனும், அனுமந்தய்யாவும், நமது அணியின் மணிகளாக விளங்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை!

இராஜ்யப் புனரமைப்புக் கமிட்டி இம்மாத இறுதியில் அறிக்கை சமர்ப்பித்துவிடும். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியும் அதை அப்படியே ஒப்புக்கொள்ள முடிவு செய்துவிட்டது. தமிழ், ஆந்திரம், கன்னடம், மலையாளம் என்ற மொழி அடிப்படையில் மாகாணம் பிரிந்து, எல்லைத் தகராறு



கோயமுத்தூர்
11—9—55

அறிவார்களா அமைச்சர்கள் ?

ஆசிரியர் அவர்களுக்கு,

எப்படி அறியப் போகிறார்கள்! மேடைகளிலும் பத்திரிகைகளிலும், நம் நாடு சுதந்திர நாடு. உடைப் பஞ்சம்–உணவுப் பஞ்சமும் கிடையாது' என்று கடனுக்குப் பேசும் சென்னை அமைச்சர்கள் வாழும் சிங்காரச் சென்னையிலே, பரிதாபக் காட்சி–பட்டினியால் உடல் ஒட்டி உயிரிழந்த கோரக் காட்சி, நான் கண்டது!

பூந்தமல்லி ஹைரோட்டிலிருக்கும் கிரீன்ஸ் ஓட்டலில் நான் தங்கியிருக்கிறேன். சென்ற நான்கு தினங்களாக நானிருக்கும் நேர் எதிர்புறமுள்ள நடைபாதையில், உடையின்றி ஓர் மனித உருவம்! ஆம் உருவம் என்றுதான் குறிப்பிட வேண்டும். நடக்கவோ பேசவோ சக்தியற்ற அந்த உருவத்தை எப்படி மனிதன் என்று மதிப்பார்கள்? உணவு, தண்ணீர், உடையின்றி இன்று காலை உயிரிழந்த கோரக் காட்சியை என் போன்றோர்கள்தான் பார்க்க முடியும்.

இந்த நிலைமாற வேண்டுமானால், நாம் கோரும் திராவிட நாடு தனியாகாமல், முடியாது.

திராவிடம் அடைந்தே தீருவோம்!

இப்படிக்கு,
மு.சண்முகம்.

★

அண்ணாமலைநகர்
11—9—55

அவரது வாயிலிருந்து...?

அன்புள்ள ஆசிரியருக்கு,

அண்மையில் இவண் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், "திராவிட மொழியின் ஒப்பிலக்கணம்" என்பது பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். அப்பொழுது அவர் பேசுகையில், "தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய இந்த நான்கு மொழியும் முன்னே ஒரு கூட்டாட்சியாக இருந்து வந்தன என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால் இன்று அந்த நான்கும் பல்வேறு நிலையில் காணப்பட்டாலும், நிச்சயம், இன்னும் 10 ஆண்டுகளில் இந்த மொழிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டாக ஒரு ஆட்சி நடத்தும்" என்றார். உடனே அந்த 'சாஸ்திரியார் மண்டப'மே அதிரும்படியாக கையொலி எழுந்தது. மேலும், நாம் செல்லும் திசையில் வராமல், வேறு திசைப் பக்கம் சென்றவர் எல்லாம், இப்பொழுது, நின்று, நம் திசைப் பக்கம் திரும்பிப் பார்த்து, அடியெடுத்து வைக்க ஆரம்பிக்கின்றனர். மேலும், இன்னும் பண்டைய வரலாறு படிக்கும் பொழுது, திராவிடம் என்ற சொல் பற்றி பலப் பல குறிப்புகள் காணக் கிடக்கின்றன. உதாரணமாக டாக்டர் இராசமாணிக்கம் எழுதிய 'பல்லவர் வரலாறு' என்ற நூலில், சீன வழிப்போக்கன் கூட திராவிடம் என்ற சொல்லை உபயோகித்திருப்பதாக அறிய முடிகிறது. (121-ஆம் பக்கத்தில் 12-வது வரியிலிருந்து கீழ்க்கண்ட முறையில் எழுதப் பட்டிருக்கிறது.)

ஹர்ஷனது பேரரசையும், இரண்டாவது புலிகேசியினது சாளுக்கியபேரரசையும் பார்வையிட்டு, பௌத்த இடங்களைக் கண்டுபோக வந்த சீன வழிப்போக்கனான இயூன் சங் என்பவன் காஞ்சிக்கு வந்தான். அவன் ஏறக்குறைய கி. பி. 642-ல் வந்தான். அவன் காஞ்சியைச் சுற்றியுள்ள நாட்டை திராவிடம் என்று குறிப்பிட்டுள்ளான். "நிலம் செழிப்புள்ளது; நல்ல விளைவு தருவது. நாடு வெப்பமானது. மக்கள் அஞ்சா நெஞ்சினர்; உண்மைக்கு உறைவிடமானவர்; கற்றவரையும் உயர்ந்த கொள்கைகளையும் மதிப்பவர். இந் நாட்டில் 100 சங் கிராமங்கள் (பௌத்த மடங்கள்) இருக்கின்றன. பதினாயிரம் பௌத்த துறவிகள் இருக்கின்றனர். திகம்பரசமணர் பலர் திராவிட நாட்டில் இருக்கின்றனர். புத்தர் காஞ்சிக்கு வந்து பலரைப் பௌத்தராக்கியதாக இந்நாட்டில் கூறப்படுகிறது. அசோகன் திராவிடநாட்டில் பல தூபிகளை அமைத்தான்."

என்றுஅந்த வழிப்போக்கன் குறிப்புப் புத்தகத்தில் வரைந்துள்ளான். ஆதலால், வரலாறும், உண்மையும் அறியாதவர்கள். நம்மை நோக்கி ஏசினாலும், அவர்களால் வரலாற்றை மறைக்கவோ, ஏசவோ முடியாது என்பது வெள்ளிடைமலை.

அன்பன்,
ஏ. ஆர். அழகப்பன்.

★ கல்லறையில் காலனி ஆதிக்கம்! ★

மதயானையாகின்றனர் மொராக்கோ மக்கள்!

* பெண்கள்கூட துப்பாக்கி சகிதம் தெருவிலே நடமாடினார்கள்!

மொராக்கோவிலே பிரெஞ்சு ஏகாதிபத்யத்தின் முதுகெலும்பு முறிந்துவிழும் ஓசை அடிமை நாடுகளின் விடுதலை விரும்பிகளுடைய காதுகளிலெல்லாம் ரீங்காரம் புரிந்த வண்ணம் இருக்கிறது. கரேனியரின் சுதந்தரப் போராட்டத்தை அடக்குவதற்காகக் கடல்போல சேனையை அனுப்பிவிட்டு. பாட்டுவிலே மாணவர் நெஞ்சங்களைத் துப்பாக்கி ரவைகளால் பிளந்து கோர நர்த்தனம் புரிந்த நேருகூட மொராக்கோவிலே கேட்கும் முரசொலிக்கு தன் அனுதாபத்தைத் தந்திருக்கிறார்.

★★ முன்பு ஆட்சியிலிருந்த சுல்தான் பென் யூசப் என்பவர் சுதந்தர கீதத்துக்கு சுருதி மீட்டித் தந்தவர். அட்டையாம் பிரெஞ்சு ஆதிக்கத்தை அக்கினிக் குண்டத்திலே தூக்கி எறிந்துவிடும் மாண்பு கொண்டவர். மொராக்கோவின் விடுதலை இயக்கத்துக்கு வேண்டிய ஆதரவெல்லாம் தந்தவர்.

★ இந்திய வரலாறு படித்தவர்களுக்கு நன்றாக நினைவிருக்கலாம்: 1857-ம் ஆண்டு இந்தியாவிலே சிப்பாய் கலகம் என்ற பெயரிலே ஆங்கில ஆதிபத்தியத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டம் துவங்கியது. மொகலாய பரம்பரையைச் சேர்ந்த பகதூர்ஷா அந்தப் போரணியிலே காணப்பட்டபோது, ஆங்கிலேயர்கள் அவரை பர்மாவுக்கு நாடு கடத்தினார்கள்—அதோடு மொகலாய வம்சத்துக்கே முற்றுப்புள்ளியும் வைத்தார்கள்.

★★ அதே விதத்தில்தான் மொராக்கோவிலும் நிலைமைகள் உருவாயின. தேசிய எழுச்சியின் சின்னமாக விளங்கிய சுல்தான் பென் யூசுபை மடகாஸ்கருக்கு பிரெஞ்சுக்காரர்கள் நாடு கடத்தினார்கள். யூசுப் அலங்கரித்த சிம்மாசனத்திலே பென் அரபா என்னும் பொம்மையைக் கொலு வைத்தார்கள்.

★ யூசுப் நாடு கடத்தப்பட்ட இரண்டாவது ஆண்டின் நினைவு நாளின் போதுதான்—சிலநாட்களுக்கு முன்பு மொராக்கோவிலே இத்தனை நாட்களும் குமுறிக் கொண்டிருந்த எரிமலை வெடித்தது!

★ எழுச்சிபெற்ற மக்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் ஆயிரம் பேர்கள் ஆவி துறந்தார்கள்.



* போலீஸ் ஸ்டேஷனை தாக்கப் போகிறோம்—என்று எழுதப் பட்ட துணிகளுடனும், பென் யூசுபின் உருவப் படத்துடனும் கலகக்காரர்கள் புலியெனச் சீறிபெழுகின்றனர்!

★★ இஸ்திக்லால் என்னும் இயக்கம்—இருண்டு போன மொராக்கோவிலே இளம்பரிதியாய் விளங்கும் விடுதலை வீரர்களின் அணி வகுப்பு!

கம்யூனிஸ்ட் அல்லாத தேசிய இயக்கம் ஆசியாவிலேயே இன்று அது ஒன்றுதானாம்!

★ பெர்பர் என்னும் போராடும் பண்புகொண்ட வகுப்பினர், இவ்வளவு நாட்களும் பொம்மை ராஜாவுக்குப் பராக்குக் கூறிவந்தார்களாம். ஆனால் இன்றோ நிலைமைமாறிவிட்டது. இஸ்திக்லால் இயக்கம் தூங்கி வழிந்த அந்தப் புலிகளின் காதிலே விடுதலை மந்திரத்தை ஓதி தன்பால் ஈர்த்துவிட்டது. அவர்களும் சீறி எழுந்தார்கள்—அதன் விளைவுதான் மொராக்கோவிலே இந்த அமளி!

★★ உயிரோடு உலவிய பிரெஞ்சுக்காரர்களெல்லாம் பிணமாக்கப்பட்டு, அவர்களின் பிரேதம் பிய்த்தெறியப் பட்டதாம்!

★★ பெண்மணிகள் கூட துப்பாக்கி சகிதம் தெருவிலே நடமாடினார்களாம்!

★★ பிரெஞ்சுப் பத்திரிகை நிருபர்களைக் கூட ஆத்திரமடைந்த பொதுமக்கள் விட்டு வைக்கவில்லை.

★★ ரோலண்ட் ஜோர்டன் என்னும் பிரெஞ்சுக்காரர், ஒரு பத்திரிகையின் போட்டோ நிருபராக மொராக்கோவிலே தங்கியிருந்தார். அவரும் பிணமாக்கப்பட்டார், பிரெஞ்சுக்காரர்பால் அறுவறுப்பு கொண்ட மக்களால்!

★★ இறுதி மூச்சு விடுவதற்குமுன்பு அந்த நிருபர் எடுத்த போட்டோக்கள் தான் இந்தப் பக்கத்தை அலங்கரிக்கின்றன!

★★ சென்றகிழமை ஆயிரம் பேர் பிணமானார்கள் — இந்தக் கிழமை மொராக்கோ விடுதலைக்கு பிரான்சிலே திட்டம் தயாராகிறது—என்ற தித்திப்புச் செய்தியும் வருகிறது.

பலாத்காரம்; கோரப்படுகொலைகள் — வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள்தான்! இருந்தாலும் இந்த இரணகளத்திற்குப் பிறகுதானே பிரெஞ்சு ஆதிபத்யம் நகர்ந்து கொடுக்கிறது!

வளர்க விடுதலை வேகம்!

★ செப்டம்பர் 12-ம்தேதியன்று பாரிசில் ஜனாதிபதி ரெனே கோடி தலைமையில்கூடி மொராக்கோவுக்கு விடுதலை வழங்குவது சம்மந்தமாக பிரெஞ்சு மந்திரி சபை ஐந்து மணி நேரம் விவாதித்ததாம்.

★ இந்தத் திட்டத்தின்படி பொம்மை சுல்தான் வீட்டிற்கு அனுப்பப் படுவராம். ஒரு ரீஜென்சி கவுன்சில் அமைக்கப் படும். இந்தச் சபை மக்கள் பிரதிநிதித்வ சர்க்காரை அமைக்கும்.

★ மொராக்கோ ஆயிரம் பேரை பலி கொடுத்துவிட்டு, அவர்கள் சமாதியிலே சுதந்திரத்தைப் பெறப் போகிறது. அதற்கான முதல் நடவடிக்கைதான் பாரிசில் உருவாகியிருக்கும் புதிய திட்டங்கள்! ⁂



* கல்நெஞ்சம் கொண்டவர்களல்ல கலகக்காரர்கள்; கனிவு கொண்டவர்கள்தான்—என்பதை நிரூபிப்பதைப்போல துப்பாக்கி ரவைக்குப் பலியான தோழனொருவனை தள்ளு வண்டியிலே வைத்து அப்புறப்படுத்துகின்றனர்!

காட்பாடி

…-9-55 சனி மாலை 6 மணிக்கு, வ. ஊ. சி. பூங்கா வெளியில், தோழர் கிருஷ்ணராஜ் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

…ன்னையில் திராவிடப்பிரிவினை வார ஊர்வலம்--கூட்டம்

…-9-55ஞாயிறு மாலை3 மணிக்கு, சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில், நேப்பியர் பார்க்கிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பெரம்பூர் ஏரிக்கரை மைதானத்தை அடையும்.

…லை 6 மணிக்கு, பெரம்பூர் ஏரிக்கரை மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுவார்கள். அப்போது பெரம்பூர் ரெயில்வே தொழிலாளர் சார்பில் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

சென்னை (திருவல்லிக்கேணி)

…-9-55ஞாயிறுகாலை 9மணிக்கு, கழகப் பணி மனையில் [4, நமசிவாய முதலித் தெரு-திருவல்லிக்கேணி] திராவிட நாடு பிரிவினை வார பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் எல். கோபால் தலைமையில், தோழர்கள் இளம்பரிதி, அன்பரசு, நடராசன், அரங்கசாமி — ஆகியோர் பேசுவர். பகல் 12-மணிக்கு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்படும்.

சென்னை (புளியந்தோப்பு)

…-9-55ஞாயிறுகாலை 9மணிக்கு, புளியந் தோப்பு பார்த்தசாரதி நாயுடு தெருவில் தோழர் சா. கோ. நாராயணசாமி அவர்கள் தலைமையில், தோழர் எஸ். சிவானந்தம் அவர்கள் கொடியேற்றி வைக்க—திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடப்படும். அப்போது ஒலிப்பதிவு செய்யப்பட்ட தோழர் சம்பத் அவர்களின் சொற் பொழிவு ஒலிபரப்பப்படும்.

பெங்களூர்

…-9-55 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு, சர் புட்டண்ணா செட்டி டவுன் ஹாலில், தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமையில், தோழர்கள் …. வெ. கி. சம்பத், டி. கே. …னிவாசன், ஏ. டி. பிரான்சிஸ்—ஆகியோர் பேசுவர். இசை: நாகூர் அனிபா குழுவினர்.

கட்டணம் ரூ. 1, அணா. 12, 8.]

புவனகிரி

…9-9-55திங்கள்மாலை 6மணிக்கு, வெள்ளாற்று மணற் பரப்பில், நடைபெறும் திராவிடநாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டத்தில் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பேசுவார்.

காங்கேயம்

1…-9-55திங்கள் மாலை6மணிக்கு, மாதர்சா சாயபு பேட்டையில், தோழர் எம் வேலுசாமி அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

எரிமலை: ஏகாம்பரம்…

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

"என்ன காரியம் செய்துவிட்டாய், ஏகாம்பரம்!"

"இதைத்தான் படுகொலை என்பார்கள், பாவ புண்ணியம் தெரிந்தவர்கள். ஆனால் நான் இதை ஒரு அருமையான 'அரசியல் ஸ்டண்ட்' என்கிறேன்!"

—தணலப்பாவின் வீட்டிலிருந்து கூக்குரல் கேட்ட சிலர், என்னவோ, ஏதோ என்று பார்க்க அந்தப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

"ஏகாம்பரம்! இன்னும் ஏன் நிற்கிறாய்? வா, ஓடிப்போய் தப்பித்துக்கொள்வோம்"

"ஓடுவதா? எங்கே? அட, பைத்தியமே! என்னோடு வா; தலைவர் வீட்டிலே ஏதோ சப்தம் கேட்கிறது என்ன நடந்தது என்று பார்த்துவிட்டு வருவோம்!"

—அப்போது யாரோ வரும் அரவம் கேட்டது. பாலன் ஓடுவதற்கு முயன்றான். ஏகாம்பரத்தால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ரகசியமாக அவன் காதிலே முணகினான் — "ஓடாதே; சந்தேகப்படுவார்கள்! வேகமாக நட!"

—இப்போது இருவருமே தணலப்பாவின் வீடு நோக்கி நடையை முடுக்கினார்கள்.

★

தணலப்பா சாய்ந்து கிடந்தார். அவரது நெஞ்சுக் கூட்டிலிருந்து உற்பத்தியான இரத்த அருவி வீடெல்லாம் பரவி ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பிணத்தைச் சுற்றிலும் தொழிலாளிகள் தாரை தாரையாய் வடியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நின்றனர்!

அடங்கியிருந்த விளக்கைச் சிறிது தூண்டிவிட்டு 'எரிமலை' ஏகாம்பரம் பேச ஆரம்பித்தான்; "நான் அப்போதே நினைத்தேன் — ஊரிலே புயல் வீசிக் கொண்டிருக்கிறதே; வீட்டிலே தலைவரைத் தனியாக விட்டு வந்திருக்கிறோமே என்று! நான் நினைத்தது நடந்து விட்டது. முதலாளிகளின் கைக்கூலிகள் நம் குபேர சம்பத்தைக் கொள்ளையடித்து விட்டார்கள். துரோகிகளைத் தூண்டிவிட்டு இரண வேட்டையாடி விட்டது 'பூர்ஷுவா மில்'லை நடத்திவைக்கும் பூர்ஷுவாக் கும்பல்! தோழர்களே! தலைவரின் பிணத்தைச் சாட்சியாக வைத்துக்கொண்டு சத்தியம் எடுத்துக் கொள்வோம். நேற்று நம் இரத்தம் சூடேறும் விதத்தில் சூறாவளிப் பிரசங்கம் புரிந்த தணலப்பா இன்று ஜில்லிட்ட பிணமாகி விட்டார். ஏன்? எங்கே நமது சக்தி எமனுருவில் வந்து விடுமோ என்று பயந்த முதலாளி சமுதாயம், நம் தலைவரை முழுங்கி ஏப்பமிட்டு விட்டது. அருமை நண்பர்களே! ஏமாளிகளல்ல நாம்; வாழ்விலே ஏற்றம் பெற இன்றே சீற்றம் பெறுங்கள். நமது மாபெரும் தலைவரைச் சுட்டு சாம்பலாக்கு முன்னர், சுரண்டலின் சின்னமாம் 'பூர்ஷுவா மில்'லை சுட்டுப் பொசுக்குங்கள். தணலப்பாவின் ஆத்மா சாந்தியடைய—நம்மைச் சந்தியிலே நிற்க வைத்த வேலைநிறுத்தம் வெற்றியடைய—'பூர்ஷுவா மில்'லுக்கு…"

சொல்லி முடித்தான், ஏகாம்பரம். உடனே "தீ வைப்போம்!"—என்ற குரல் உரக்கக் கிளம்பியது. 'ஆம்' 'ஆம்'—என்று அசைந்தன தலைகள்! பொதுக்கூட்டத்திலே அவன் பேச்சிலே பயமறியாப் பசுங்கன்றின் துள்ளல் இருப்பதாக முணகியவர்கள் — முட்டாள்தனமான யோசனை என்று விமர்சனம் செய்தவர்கள் — அவர்கள் அனைவரும்கூட இப்போது ஏகாம்பரத்தின் திட்டத்துக்கு எதிர்ப்பு சொல்லவில்லை.

கூட்டம் கலைந்தது பாலன் மட்டும் பைத்யம் பிடித்தவனைப்போல நின்று கொண்டிருந்தான்.

"ஏகாம்பரம்! தலைவனில்லாமல் எப்படியப்பா நம்முடைய போராட்டம் வெற்றிபெறும்?"

"கவலைப்படாதே! தணலப்பாவைப் போன்ற வாய்மூடிகள் உயிருடன் இருப்பதைவிட செத்த பிறகே சமுதாயத்துக்கு அதிகமாக சேவை செய்கிறார்கள்!"

"சரியான தலைவனில்லாவிட்டால் வெற்றி கிடைக்குமென்றா நினைக்கிறாய்?"

"தோழனே, கேள்! பானிபட் போர்க் களத்திலே பாபரை எதிர்த்து போருக்குத் தலைமை வகித்த இப்ராகிம் லோடி அம்பு தைத்து யானையிலிருந்து கீழே விழுந்ததும், தலைவனை இழந்த சேனை சிதறியோடிப் போனதை சரித்திரத்திலே படித்துவிட்டு இப்படிப் பேசுகிறாய்! இது இருபதாம் நூற்றாண்டு! இந்தக் காலத்துப் போர்முறைக்கு உயிருள்ள தலைவன் தேவையில்லை-நண்பனே! அவன் பிரேதமே போதும், பிரளயம் உண்டு பண்ண! புரிந்ததா தோழா?"

–சொல்லி விட்டு சிரித்தான் 'எரிமலை' ஏகாம்பரம். அந்தச் சிரிப்பொலியிலே தீக்கொழுந்து தழுவி 'பூர்ஷுவா மில்' மண்ணிலே சரிந்துவிழும் ஒலி-—அழிவுவந்ததே என்று முதலாளிகள் மூக்கினால் அழும் சோகப் பேரொலி-பிறகு அவன் தன் காலைப் பிடித்துக் கொண்டு 'தோற்றேன்! தோற்றேன்!' என்று பாடும் சிரவாகிகளின் தொகையறு ஒலி — இறுதியில் தொழிலாளிக் கூட்டம் "வெற்றி! வெற்றி!" என்று ஊர்வலமாக வீதியிலே எழுப்பும் ஒலி-அனைத்தும் ஐக்யமாகி அதிர்வேட்டு போல முழக்கமிட்டது!

★

துப்பாக்கி ரவைகளுக்கும் துவண்டோமில்லை!

ஆணவத் தலைவராம் ஆச்சாரியார் ஏவிவிட்ட இரக்கமற்ற அடக்குமுறைகளுக்கு இளஞ்சிங்கங்கள் பலரைப் பலிகொடுத்திருக்கிறோம், நாம்!

விடுதலைப் பீடத்திலே வீரர்கள் பலரின் தலைகளை வெட்டி எறிந்திருக்கிறது, விவேகமற்றோரின் துரைத்தனம்!

காதலியின் கன்னம் வருடும் போதும் எண்ணத்தையெல்லாம் இந்த நாட்டின்மீதே சுமத்தியிருந்த சந்தனம்ஜோசப் என்பான் கைகளில் ஒன்றைஇழந்தான், கல்லக்குடியிலே

போர் என்றதும் பாய்ந்துவந்து பாசறை அமைக்கும் முருகேசன், கால்களில் ஒன்றைக் காவு கொடுத்தான் தூத்துக்குடியிலே!

ராஜு என்ற செபாஸ்டினுடைய ஆண்குறியை அறுத்துச் சென்று ஆனந்தப் பள்ளுபாடியது ஆச்சாரியாரின் அடக்குமுறை ஆயுதம்!

இதற்கு முன்பே குன்றத்தூர் என்னும் சிற்றூரில் தோழர் நடராசன் கலந்து கொண்ட கூட்டத்தில் தோட்டா தர்பார் நடத்தியது 'சோட்டா காந்தி'களின் ஆட்சிபீடம்!

நினைவிருக்கட்டும்—அண்ணா சொல்வது போல நாம் பிரிந்து வந்த பிறகுதான் நம்மை அடக்க, இயக்க வரலாற்றிலேயே, முதன்முறையாக அரசாங்கம் துப்பாக்கிக் குழாய்களைத் திறந்து விட்டது! இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு இன உணர்ச்சிக் களத்திலே குதித்து விட்டோரை துப்பாக்கி வேட்டுகள் என்ன செய்துவிட முடியும்?

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

தந்தைக்குப்பின்..!

★

மேற்கு திசை வானம் செந்நிறமாகத் தோன்றியது. போர்க்களத்தை பிரதிபலிக்கும் கண்ணாடியோ என்ற சந்தேகத்தையும் எழுப்பியது. ஆமாம்;மாலை வானத்திற்கும், இரத்தம் தோய்ந்த போர்க்களத்திற்கும் அப்போது வித்தியாசமே தெரியவில்லை.

அன்று பகல் முழுதும் நடந்த மாபெரும் போர்—அந்தப் போர் குவித்த பிணமலைகள்—அப்பப்பா! அந்த இடம் இரத்த மயமாக மட்டுமல்ல; பயம்-பதைபதைப்பு—பரிதாபம்--பிரளயம் — இவை அத்தனையையும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தது.

மகோபா— அழகான இடம் தான்; அற்புதமான நகர்தான். ஆனால் அந்த இடத்திலே போர் நடைபெற்ற பிறகு?...பிருதிவிராஜனின் படைகளும், ஜெயச்சந்திரனின் வீரர்களும் மோதிக்கொண்ட பிறகு?... ஜெயச்சந்திரனின் படைகளைக் கொன்று குவித்து, பிருதிவிராஜன் வெற்றிமாலை சூடிய பிறகு?...அந்த அழகான நகர் அலங்கோலமானதில் வியப்பென்ன?

'அப்பா...அப்பா...'

இதென்ன குரல்? செத்துக் கொண்டிருக்கும் வீரன் யாராவது முணுமுணுக்கிறானா? காயம் தரும் வலி தாங்காது கதறுகிறானா? இல்லை; இல்லை. அது வீரனின் குரல் அல்ல; நன்றாகத் தெரிகிறது-அது ஒரு சிறுவனின் குரல்!

ஆமாம்; சிறுவன்தான். 'அப்பா அப்பா' என்று அழைத்துக் கொண்டு வருகிறான். செத்துக் கிடக்கும் வீரர்களை—சாகப்போகும் வீரர்களை புரட்டிப் புரட்டிப் பார்க்கிறான். அவன் அப்பாவைக் காணோம். அவனுக்கு அழுகை வந்தது.'எங்கே சென்றார் தந்தை?' —இந்தக் கேள்வி அவன் மனதை வாட்டிக் கொண்டிருந்தது.

ஓடினான். போர்க்களத்தை விட்டு ஓடினான். ஊருக்குள் புகுந்தான். சண்டையிலிருந்து திரும்பியவர்களைத் தேடினான். 'எங்கே என் அப்பா?' என்று படபடப்புடன் கேட்டான்.

'உன் அப்பனா? சௌம்யனா? தெரியாதா உனக்கு? போர்க்களத்திலிருந்து புறமுதுகு காட்டி ஓடிவிட்டானே!'—இப்படிக் கிடைத்தன பதில்கள்!

'ஆ' சிறுவன் அதிர்ச்சியால் கூச்சலிட்டான். தந்தை புறமுதுகு காட்டி ஓடினாரா? போர்க்களத்தில் கண்ட பயங்கரத்தைவிட இந்தச் செய்தி அவனை நடுநடுங்க வைத்தது.

'உண்மைதானா ஐயா? என் தந்தை சண்டைக்கு பயந்து ஓடிவிட்டாரா?' — சிறுவன் புலம்பினான்.

'பின் என்ன? செத்திருந்தால் களத்திலே கிடைத்திருக்கும் பிணம்! உயிரோடிருந்தால் நாட்டுக்கு வந்திருப்பார்! இரண்டு இடத்திலும் இல்லை. ஓடியிருக்கத் தானே வேண்டும்! பிருதிவியின் படையிலே அவன் ஓர் அவமானச் சின்னம்! சீ... அவனும் ஒரு வீரனா?'--கேலி பேசினர் மற்றவர்.

'அவனும் ஒரு வீரனா?'

'அவனும் ஒரு வீரனா?'

விஷம் தோய்ந்த வேலாகப் பாய்ந்தன அந்தக் கிண்டல் சொற்கள். 'அப்பா'—என்று அலறினான் அந்தச் சிறுவன். நடந்தான்; நடந்துகொண்டேயிருந்தான். அவன் எங்கு போகிறான்? ஏன் போகிறான்?

அப்பா எதிரிக்கு பயந்துவிட்டார்—புறமுதுகு காட்டி ஓடிவிட்டார் — வீரம் மறந்தார் — மானம் இழந்தார்—இந்தப் பேரிடி அந்தச் சிறுவனின் நெஞ்சத்தை என்ன பாடு படுத்திவிட்டதோ! என்ன முடிவு செய்து விட்டானோ, அவன்!

★

பிருதிவிராஜனிடம் தோற்றுப் போனான் ஜெயச்சந்திரன். போர்க்களத்தை விட்டு ஓடினான். ஆனால் கோபம் தணியவில்லை; ஆத்திரம் அடங்கவில்லை. என்ன செய்வது? பிருதிவியை வெல்ல ஏது வழி?—இப்படி யோசித்தான். முடிவொன்றும் செய்தான். இரை தேடி அலையும் நாயைப் போல் காத்துக் கிடந்த முகமது கோரியிடம் ஓடினான். படை கேட்டான்; உதவி கேட்டான்; கோரி ஒப்புக் கொண்டான். நாடு பிடிக்க நல்ல வழி என்று திட்டமிட்டான்.

அப்புறமென்ன? கோரியின் பெரும்படையும், மிச்சமிருந்த ஜெயச்சந்திரனின் சிறுபடையும் போருக்குப் புறப்பட்டன. பிருதிவிராஜன் இரண்டு படைகளையும் எதிர்க்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தான்.

★

பிருதிவியின் பாசறை!
போர்முறை வகுக்கப்படுகிறது!
வீரர்கள் சபத மேற்கின்றனர்!

அப்போது, யாரும் எதிர்பாராத வண்ணம்—எண்ணத் துணியாத வண்ணம்—ஒரு சிறுவன் மன்னனின் முன்னே ஓடிவந்து நின்றான்.

'யார்? அலங்காரனா?'--சேனைத் தலைவன் இப்படிக் கேட்டான். ஆமாம்; அந்தப் பையனின் பெயர் அலங்காரன்தான்!

'என்ன தம்பி?' என்று சேனைத் தலைவன் மீண்டும் கேட்டான்.

'மன்னா! குலத் துரோகி ஜெயச்சந்திரன்—அவனுடன் கூடவரும் கோரி எனும் கொடியவன்—இருவரையும் கொன்றுவர எனக்கு உத்தரவு தேவை. ஆமாம்;படைக்குத் தலைமை வகித்துச் செல்ல என்னை அனுமதியுங்கள்'—அலங்காரன் முடிக்கவில்லை.

சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் பகபகவென்று சிரித்தார்கள். 'போர்க் களம்—அதிலே இரண்டு பெரும் புலிகள்-நடுவிலே வாலை சுழற்றிப் போகத் துடிக்கிறது வெள்ளாட்டுக் குட்டி'—இப்படி கிண்டல் பேசினான் சேனைத் தலைவன்.

'ஏன் சிரிக்கிறீர்கள்? என் தந்தையைப் போல மானம் மறந்தவனல்ல நான். புறமுதுகு காட்டி ஓடிவிட மாட்டேன். களத்திலே வெற்றி அடைவேன்; அல்லது வீர மரணம் அடைவேன்'—சிறுவனின் கண்கள் சிவந்தன.

'என்ன! உன் தந்தை—சௌம்ய ராயன் புறமுதுகிட்டு ஓடினானா?' இது வரைப் பேசாதிருந்த மன்னன் கோபமுடன் கேட்டான்.

'ஊரெல்லாம் சொல்கிறது, மன்னா! களத்திலே பிணத்தைத் தேடினேன். கிடைக்கவில்லை'—சிறுவனுக்கு அழுகையே வந்துவிட்டது.

'அலங்காரா! உன் தந்தை புறமுதுகு காட்டி ஓடவில்லை—இறந்துவிட்டான், எனக்காக! பிணம் எங்கே என்கிறாயா? கேள் கதையை!

'மகோபா யுத்தத்தின்போது நான் படுகாயம் அடைந்து விட்டேன். என்னால் எழ முடியவில்லை. உடல் சோர்ந்தது — உள்ளமும் சோர்ந்தது. சாகத்தான் போகிறோம் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அப்போது...என்ன பயங்கரம்! பெரிய பெரிய கழுகுகள்—பருந்துகள் எல்லாம் என்னை வட்டமிட்டன. என்னைக் கொத்தித் தின்னத் தொடங்கின. நான் கதறினேன். கையைத் தூக்கி அவைகளை விரட்டவோ முடியவில்லை. கைகளை அசைக்கவே முடியவில்லை. அவைகள் என்னை உயிரோடு கொன்றுகொண்டிருந்தன.

'அப்போது அந்தக் கழுகுகளுக்கும், பருந்துகளுக்கும் யாரோ இரை வீசுவதுபோல இருந்தது. அவைகள் என்னை மறந்தன. மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தேன். என்ன சொல்வேன்! சௌம்ய ராயன் தன் உடலிலிருந்து சதைத் துண்டுகளை அறுத்து அவைகளுக்கு வீசிக் கொண்டிருந்தான். பாவம், அவனும் என்னைப் போலவே எழ முடியாத நிலையில் கிடந்தான்.

'சௌம்யா!' என்று கத்தினேன்.

'அரசே! விரைவில் தப்பிக்க வழி பாருங்கள்! இல்லையேல் கழுகுகள் உங்களைக் கொன்றுவிடும்' என்று அலறினான். தனது உடல் சதைகளை அறுத்து வீசிக்கொண்டேயிருந்தான். அவன் உடல் குலைந்தது. சின்னா பின்னமானான். மறுமுறை அவனைப் பார்த்தேன். 'ஐயோ: சௌம்யா!' என்று கதறிவிட்டேன். மறுகணம் நான் மூர்ச்சை அடைந்தேன்.

'மறுபடி கண் விழித்தேன். அரண்மனையிலே கிடந்தேன். சௌம்யனின் நினைவு வந்தது. பாவம், எனக்காக அவன் தன்னை தியாகம் செய்தான். அவனை புறமுதுகுகாட்டி ஓடியவன் என்று நினைக்காதே! அவன் மாவீரன் — பெரும் தியாகி!'

'அந்த வீரனின் மகன் நீ! உன் ஆவலைத் தடுக்க மாட்டேன். உனக்கே தந்தேன் படைத் தலைமைப் பதவி! தந்தையின் வீரத்தை நிலைநாட்டு!''

—பிருதிவிராஜன் பேசி முடித்தான்.

'அப்பா!'—அலங்காரன் ஆனந்தத்தால் கூச்சலிட்டான்.

★

பதினான்கு வயதிலே படைக்குத் தலைமை வகித்துச் சென்றான்—'புலிக்குப் பிறந்தேன்; பூனையாக மாட்டேன்'என்பதை நிலை நிறுத்தினான்—அந்தப் பச்சிளம் பாலகன் படை செலுத்திய பாங்கு சரித்திரத்திலே சாகாத முத்திரைகள்—வியக்க வைக்கும் வீர நிகழ்ச்சிகள்—எதிர் கால வீரர்களுக்கு; இன்றைய தம்பிகளுக்கு நலன் குவிக்கும் கதைகள்—நல்லரும் பாடங்கள்!

—சொர்ணம்

தாய் நாட்டு விடுதலைக்கு 'தாய்' தந்த காணிக்கை!

அந்தச் சிறுவன் பலமற்றவன். ரொம்பவும் மெலிந்தவன். வறுமை அவனை அப்படி நோயாளியைப் போல் ஆக்கிவிட்டிருந்தது. அவன்தான் அப்படி என்றல்ல; அவன் நாடும் அதைப் போன்ற நிலையில்தான் இருந்தது. வறுமை—அது குவிக்கும் வேதனை-வாட்டம்-இப்படி பரிதாபமான நிலையில் இருந்தது இத்தாலி!

இதற்கென்ன காரணம்?—சிறுவன் யோசித்தான். "அன்னியனின் ஆதிக்கம் நம் நாட்டை விட்டுத் தொலையவேண்டும்"—என்ற விடை கிடைத்தது. மனம் அப்படி பதில் தந்தது.

அவ்வளவுதான்; அம்மாவிடம் ஓடினான். 'ஏனம்மா? நம் உடல்-உயிர்-இவை பெரிதா? நாடு பெரிதா?' என்று கேட்டான்.

'இதென்ன கேள்வி மகனே! நாடுதான் பெரிது—மிகமிகப் பெரிது!' என்றாள் அம்மா.

"அப்படியானால் நாட்டுக்காக உயிரைக் கொடுக்கலாமா, அம்மா?"

"தாராளமாக! உயிரை மட்டுமல்ல; அதைவிட உயர்ந்த பொருள் ஏதேனுமிருந்தாலும், அதையும் நாட்டுக்குத் தரலாம்; அது நல்லதிற்கு தந்ததாகும்."—அம்மா பதில் சொல்லி முடித்தாள்.

ஆனால், மறுகணமே அவள் சற்றும் எதிர்பாராதவண்ணம் மகன் ஒரு பேரிடியைத் தூக்கிப் போட்டான்.

"அப்படியா? அப்படியானால் ஒரு காரியம் செய்வாயா அம்மா? என்னை நாட்டுக்குக் கொடுத்துவிடம்மா!" என்றான் சிறுவன்.

தாய் திகைத்தாள், திணறினாள். ஆனாலும் பயந்தாள் இல்லை; தன் மகனை-உயிருக்கும் மேலான செல்வனை நாட்டுக்கே அர்ப்பணித்தாள். அந்த நல்லதம்பி தான்—இத்தாலிய நாட்டு விடுதலைக்குப் போராடிய தீரன்--மாஜினி என்பான்!

'எழுத்தாணி'

அரங்கநாதன்; தேனி.

(?) நம் கம்யூனிஸ்ட் நண்பர்கள் எப்போது மதச் சீர்திருத்தத்தை தொடங்குவார்கள்?

ராமமூர்த்தி (அய்யர்)களின் ஆதிக்கம் அவர்கள் கட்சியில் குறையும்போது!

பொன்வேல்; திருவள்ளூர்.

(?) அரசாங்கம் ஆறு புதிய வரிகளை அமுல் நடத்தினால் வரப்போகும் எலெக்ஷன் என்னவாகும்?

ஒன்றும் ஆகாது. அந்த வரிகள் ஏற்படுத்திய காயத்தில் வெண் சாமரம் வீசுவதற்குத்தான் நேரு வரப்போகிறாரே!

ஐம்புலிங்கம்; பெரம்பூர்.

(?) கோவாப் படுகொலையில் உயிரிழந்தோர் அனைவரும் நேருவின் சொந்தக்காரர்களாய் இருந்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்?

தனக்குப் பின்னால் இந்தியாவைக் கட்டியாள வேண்டிய வாரிசுகள் அழிந்து விட்டனவே என்று நேரு வருந்தப்பட்டிருப்பார்!—அவ்வளவுதான்!

(●) வி. எஸ். சமலா சந்திரன்;
காரைக்கால்.

[?] 'தட்சிணப் பிரதேசம்' பற்றி உங்கள் கருத்தென்ன?

இப்போது அடிபடுகிற தட்சிணப் பிரதேசம், டேல்லிக்குத் தட்சணை செலுத்துகிற காரணத்தால்—"தட்சணைப் பிரதேசம்" என்று பெயர் மாற்றலாமென்று மேயருக்கு சிபார்சு செய்கிறேன்; அவ்வளவு தான்!

கே. ம. மணிவண்ணன்;
சென்னை-1

(?) திராவிடநாடு பிரிந்தால் அப்போது காங்கிரஸ் இருக்குமா?

இருக்கலாம்-விந்தியத்துக்கு வடக்கே!

கே. பச்சையம்மாள்:
கும்மம்பட்டி.

(?) பெண்ணுக்கும் ஆணுக்கும் அழகைத் தருவது எது?

பெண்ணுக்குத் தையல் மிஷின். ஆணுக்கு க்ஷவரக் கத்தி.

எஸ். நாதன்; சிவகங்கை.

(?) விபச்சாரத் தடைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்கும் அரசாங்கம், ஆண்டவனாகிய அழகர் ஆண்டு தோறும் விபச்சார விடுதிக்கு பகிரங்கமாக நடத்திச் செல்லப் படுவதை ஏன் தடுக்காமல் இருக்கிறது?

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) கமலா சந்திரன்,
காரைக்கால்
[தோழர் தெளிவான முகவரி எழுதியனுப்ப வேண்டுகிறோம்]

விபச்சாரக் குற்றத்திற்காக கடவுள்களுக்குத் தண்டனை வழங்கினால் இந்த நாட்டுச் சிறைக் கோட்டத்தில் இடமில்லாமல் போகுமே என்ற காரணமாயிருக்கும்!

துரை முருகேசன்; காரமடை.

[?] எழுத்தாளர்களுக்கே உரித்தான பொதுச் சொத்து எது?

பேனா! பேப்பர்!

(?) சிகப்பு, வெள்ளை, பச்சை—கொண்ட மூவர்ணக் கொடி நாட்டிற்கு அளித்தவை யாவை?

'வர்ணாச்சார'ப்படிக் கூறுகிறேன்: உரிமை கோருவோரின் நெஞ்சிலிருந்து வழியும் இரத்தம்; உழைப்போரின் எலும்புக் கூடுகள்; நாட்டிலே உலவும் பாசி பிடித்த கோள்கைகள்—இவைதான்!

(?) பிணத்திற்குச் சமாதி கட்டுவதைப் போலத்தான் ஆலயங்களும் ஆண்டவனுக்குக் கட்டி வைத்த சமாதிகள்—என்கிறார் ஒருவர். அவருக்கு நான் என்ன சொல்வது?

அப்படியானால் சமாதிக்கு ஏன் சர்க்கரைப் பொங்கலும், சமாராதனையும் என்று அவரைக் கேளுங்கள்!

தயா. ஜெயபால்; காரமடை.

(?) நேருவுக்கும், ஆச்சாரியாருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

காந்தியாருக்கு சம்மந்தியாகாமலேயே இந்திய அரசியலில் சங்கீதம் பாடிக்கொண்டிருப்பவர், நேரு!

டி. கே. விமலன்; தூத்துக்குடி.

(?) காமராசருக்கும், கிருஷ்ண மேனனுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

காமராசர் ஒரு 'பெண்டுலம்'—சென்னைக்கும் டெல்லிக்குமாக அலைந்துகொண்டிருப்பார். கிருஷ்ணமேனன் கடிகாரத்தின் பெரிய முள்—உலகத்தை வட்டமடித்துக் கொண்டிருப்பார்.

[?] நேருவின் பஞ்சசீலக் கொள்கையை செந்தாமரை என்கிறான் என் நண்பன்.

இருக்கலாம்; அதனால்தான் அது கோவா-பாட்னாவிலே ஏற்பட்ட இரத்தச் சேற்றிலிருந்து முளைத்தது என்கிறேன், நான்!

ப. சுப்ரமணியன்; சலங்கப் பாளையம்.

[?] நேருவின் 'ஜீவனாடி' எது?

அவரது வாய்!

எம். தமிழரசி;
தேசமுகப்பேட்டை.

[?] உவமேயம் கூறுக: "மகப்பேறு வேண்டுந் தாய் பிரசவ வேதனையை அனுபவிப்பது போல......"

விடுதலை விரும்பும் இயக்கங்கள் ஆதிக்க வெறியர்களின் அடக்குமுறைக் கணைகளைத் தாங்கிக் கொள்கின்றன!

ஓ. எம். சுப்ரமணியன்;
போத்தனூர்.

(?) நேரு சென்ற முறை வந்த பவனியின் போது நம்மை 'நான்சென்ஸ்' என்றார். இந்த முறை?

'நான்சென்சை' உபயோகித்ததற்காக சில நாட்களுக்குமுன் பார்லிமெண்ட்டிலே காமத் என்னும் அங்கத்தினரைவெளியே அனுப்பியிருக்கிறார்கள். தவிர; நேரு ரஷ்யா போன்ற மேல் நாடுகளுக்கெல்லாம் சென்று இப்போதுதானே திரும்பி வந்திருக்கிறார். பண்பாடுகளை அதற்குள்ளாகவா மறந்திருக்கப் போகிறார்!

(?) யாருடைய குரல் நேருவின் காதில் விழுகிறது? யாருடையது விழுவதில்லை?

எவருடைய குரலும் அவர் காதில் விழுவதில்லை. அவர் குரல் தான் பாரத நாட்டாரை செவிடாக்கி வருகிறது!

எம். துரைராசு; இராமதாசு;
தஞ்சை.

(?) மக்களுள் பதர் யார்?

சிந்திக்கும் தானிய மணியைப் பறிகொடுத்தவன்!

(?) கம்யூனிஸ்ட்கள் ஏன் இந்தத் தேர்தலில் தனியாக நிற்கிறார்கள்?

சேர்ந்து நின்று அடையாளம் காட்ட முடியாத அளவுக்கு சுருங்கிப் போயிருக்கிறார்கள்—அதனால்தான்!

அன்பழகன்; வளவனூர்.

(?) காங்கிரஸ் எப்போது சுறுசுறுப்பாக வேலை செய்யும்?

தேர்தல் அரிப்பு எடுக்கும்போது!

சோ. சீனுவாசன்; காட்டுப் புத்தூர்.

(?) 4-அணா காங்கிரஸ்; 11 ரூபாய் காங்கிரஸ்—என்கிறார்களே; இதற்கு என்ன அர்த்தம்?

11 ரூபாய் காங்கிரஸ் பதவி தேடுவதற்காக!-நாலணா காங்கிரஸ் 11 ரூபாய்களுக்கு உழைப்பதற்காக!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.